சத்தீய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு மாசிமாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 5-ம் இலக்கம்

# லூர்துபதிக் காட்சிகளும்

## பெர்னதேத் அம்மாளும்

லூர்துபதியில் மாசில்லாத மாதாவின் காட்சியைப்பெறப் பாக்கியம்பெற்ற பெர்னதேத் எனும் இந்த இடையர்குலப் பிராஞ்சியசிறுமி பிற்பட்டகாலத்தில் ஒரு கன்னியாஸ்திரி மடத்திற் துறவறசீவியத்தைத் கைக்கொண்டொழுகி, பரிசுத்தமாகச் சீவித்துப் புண்ணிய நறுமணங் கமழ மரித்துப் பரலோக பிராப்தியாயினள். இவள் மரணத்தின் பின்பு நடந்த அற்புதங்கள் காரணமாய், லூர்துகாட்சியின் எழுபத்தைந்தாம்வருட யூபிலிக் கொண்டாட்டங்களுக்கு முடிசூட்டும் நோக்கத்துடன் பதினோராம் பத்திநாதபாப்பானவர் இவளுக்கு அர்ச்சியசிஷ்ட பட்டஞ் சூட்டலாயினர். இப்புண்ணியவதி சீவந்தராயிருந்தகாலத்து, O.M.I. கூட்டத்துக் குருமாரில் ஒருவராகும் வண. கொன்ட்றன்ட் சுவாமியாருக்குத் தான்அடைந்துகொண்ட காட்சியைப்பற்றி எவ்வித சோடிப்புமின்றி ஒருகடிதம் எழுதியிருக்கிறாள். பரிசுத்த லூர்து மாதாவின் திருநாள் அடுத்துவரும் இச்சந்தர்ப்பத்திலே— லூர்துபதிக்காட்சிகளின் நூறும் ஆண்டுவிழாக்கொண்டாட்டம் பூர்த்தியடையவிருக்கும் இத்தருணத்திலே லூர்துமாதாவின் பக்தர்கள் இதனைப்படித்துப் பேருவகை எய்துவார்களென நம்புகின்றோம். கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:

வண. பிதாவே! நான் இன்னும்வேறிருசிறுமிகளுடன் காவ் நதிக்கரைக்கு விறகுபொறுக்கும்படி போயிருந்தேன். அவர்கள் இருவரும் ஆற்றில்இறங்கி நீருள் நின்றுகொண்டு அழத்தொடங்கினார்கள். ஏன்அழுகிறீர்கள்என்று நான்கேட்டதற்கு, ஆற்றுநீர் வெகுகுளிராயிருப்பதால் தாங்கள்அழுவதாக அவர்கள்சொன்னார்கள். ஆற்றுக்குள்ளே கற்களை எடுத்துப்போட்டுவிட்டுத் தண்ணீரில்கால்படாது அதனைக் கடந்துசெல்ல எனக்குத் துணை புரியும்படி அவர்களிடம்கேட்டேன். அவர்கள் அதற்குச் சம்மதியாது தாங்கள்ஆற்றைக்கடப்பதுபோல நானும்செய்யலாமென எனக்குச்சொன்னார்கள்.

அதன்பின் நான்சிறிதுதூரஞ் சென்று எனதுசப்பாத்துகளைக் கழற்றாமல் ஆற்றைக்கடக்கக் கூடியஇடம் இருக்குமோஎன்று பார்த்தேன். அப்படிச்செய்ய முடியாதபடியால் திரும்பிவந்து குகைக்குமுன் எனதுசப்பாத்துகளைக் கழற்றினேன். அப்படிச் செய்துகொண்டிருக்கும்பொழுது பெருஞ்சப்தமொன்றைக் கேட்டேன். நிமிர்ந்து எனக்கு முன்னிருந்தவெளியை உற்றுநோக்கியவிடத்து, அங்குநின்ற மரக்கிளைகள்ஒன்றும் அசையவில்லை. ஆதலால்மீண்டும் எனது சப்பாத்துகளைக் கழற்றத் தொடங்க, முன்போலவே அதே சப்தம் எனதுகாதில்விழுந்தது. நிமிர்ந்து குகையைநோக்கிப் பார்த்தேன். பார்த்தவிடத்து, வெண்ணிறஉடைஅணிந்த ஒரு மாதுஅங்குநிற்பதைக்கண்டேன். அவருடையமேலங்கி வெண்ணிறமுடையதாய், அவருடையஇடைக்கட்டு நீலநிறமுள்ளதாய், அவருடையபாதத்தில் இரண்டுமஞ்சள் ரோசாப் புஷ்பங்கள்--அதாவது எனதுசெபமாலை மணிநிறத்தைப் போன்ற புஷ்பங்களாய் இருப்பதைக்கண்டேன். அந்தக் காட்சியை நான் கண்டபொழுது ஒருவேளை நானே என்னைஅணுப்பிக்கொள்ளுகிறேன்என்று எண்ணி எனதுகண்களை இறுகமூடிக்கொண்டேன். எனது சட்டைச்சாக்கில் கையைவைத்து எனது செபமாலையைஎடுத்துச் சிலுவை முத்திரைபோட எத்தனித்தேன். ஆனால், கைகளை நெற்றிமட்டும் உயர்த்தமாட்டாதுபோனேன். அவைகள் சோர்ந்துகீழே விழுந்தன. காட்சிநாயகியை மீண்டும் உற்றுப்பார்த்தவிடத்து, அம்மாது சிலுவைஅடையாளம் வரைவதைக் கண்டேன். அதைக் கண்டதும் நானும் எளிதிற் சிலுவைஅடையாளம் வரையக் கூடியவளானேன். அதன்பின் நான் செபமாலை சொல்லத்தொடங்கினேன். காட்சிநாயகியும் செபமாலைமணிகளை உருட்டிக்கொண்டிருப்பதாகத் தோற்றியது, ஆனால், அவருடைய உதடுகள் அசையவில்லை. எனதுசெபமாலை முடிந்ததும் காட்சிமறைந்துவிட்டது. என்னுடன் கூடவந்த சிறுமிகளும் ஏதாவது விசேஷ காட்சியைக் கண்டனரோவென அவர்களிடம் கேட்டேன். அவர்கள் தாங்கள் அப்படியொன்றும் காணவில்லையென்று சொன்னமையால், நான் ஒரு வெண்ணிற ஆடைஅணிந்த ஸ்திரி ஒருத்தியைக்கண்டேனென்றும், அதைப் பற்றி அவர்கள் பிறருக்குஒன்றும் சொல்லப்படாதென்றும் கேட்டுக்கொண்டேன். அச்சிறுமிகளோ நான்இனிமேல் ஒருபோதும் அந்தஇடத்துக்கு வரப்படாதெனச் சொன்னார்கள். நான் வரேன்என்றுசொல்லிவிட்டேன்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் மீண்டும் அங்குவந்தேன். அங்கு செல்லும்படி எனக்குள்ளிருந்துகொண்டு ஏதோ ஒருவல்லபம் என்னைத் தூண்டிக்கொண்டிருந்தது. நான் அங்குபோகப்படாதென எனதுதாய் என்னைத் தடுத்திருந்தார். ஞாயிற்றுக்கிழமை பாடற்பூசையின் பின்பு நானும், மற்றஇருசிறுமிகளும் குகைக்குப்போக உத்தரவு தரும்படி தாயாரிடம் கேட்டோம். அவர் அதற்குத் தொடக்கத்திற் சம்மதிக்கவில்லை. நான் ஆற்றுக்குள் விழுந்துவிடக்கூடும் என்றும், நான் வேஸ்பர் மாலைஆராதனைக்குப் பிந்திப்போகக்கூடும் என்றும் எனது தாயார்கூறி என்னைத் தடுத்தார். ஆனால்,நான் பிந்தாமல் வந்துவிடுவேன் என்று வாக்குப்பண்ணியபடியால் அவர் எனக்கு உத்தரவு கொடுத்தார்.

நான் குகையை அடைந்ததும் அந்தஸ்திரியை அங்குகண்டால் அவர்மீது தெளிப்பதற்குக் கொஞ்சம் ஆசிநீர் கொண்டுபோயிருந்தேன். குகையைச் சேர்ந்ததும் நான் அந்தக் காட்சிநாயகியை அங்குகண்டபடியால் அவர் மீது ஆசிநீரைத் தெளித்தேன். அவர் புன்னகைசெய்து என்னை நோக்கித் தலைசாய்த்தார். நான் செபமாலை சொல்லிமுடிந்ததும் 15நாட்களுக்கு நான் மீண்டும் மீண்டும் அங்குவரக்கூடுமோஎன அந்தஸ்திரி என்னிடம் கேட்டார். அதற்கு நானும் சம்மதித்தேன். அந்தஇடத்தில் ஒருகோவில் கட்டும்படி குருமாருக்கு அறிவிக்கும்படி அவர் எனக்குச்சொன்னார் அதன்பின்னர் நீரூற்றிலிருந்து தண்ணீர் குடிக்கும்படி அவர் எனக்குச்சொன்னார்.

நீரூற்றொன்றையும் காணாதபடியால் காவ்நதியை நோக்கிச் சென்றேன். ஆனால், அந்தஸ்திரியோ என்னைத்தடுத்து நதியில் அல்ல நீரூற்றில் என்று எனக்குச் சொல்லி நீரூற்றென்று ஒரு இடத்தைக்காட்டினார். அதைப்பார்த்தவிடத்து அவ்விடத்தில் ஒருசிறிது சேறுகலந்த அழுக்கானநீர் இருக்கக்கண்டேன். அதை அள்ளப் பிரயாசப்பட்டும் என்னால் முடியவில்லை. ஆனால், அவ்விடத்தை எனது கையால் விறாண்ட நீர் சுரந்துகொண்டுவந்தது. மூன்றுமுறை அந்தநீரை அள்ளிப்பருகப் பிரயாசப்பட்டும் முடியவில்லை. நான்காம்விசை நான் அதைஎளிதில்அள்ளிப் பருகக்கூடியதாகவிருந்தது. இதன்பின்னர் காட்சிமறைய நானும் அவ்விடத்தை விட்டகன்றேன்.

பதினைந்து நாட்களாக நான் குகைக்கு ஒவ்வொருநாளும் சென்றேன். ஒருதிங்கட்கிழமையும், வெள்ளிக்கிழமையும்போக, மற்றெவ்வொருநாளும் நான் அதேஸ்திரியின் காட்சியைக் கண்டேன். அவ்விடத்தில் ஒருகோவில் கட்டும்படி குருமாருக்கு நான் அறிவிக்கும்படியும், அந்த நீரூற்றிற்சென்று தண்ணீர்பருகும்படியும், பாவிகளுக்காக மன்றாடும்படியும் அவர் எனக்குச் சொன்னார்.

அவர் ஆர்என்று நான் பலநாட்களாக அவரிடம் கேட்டேன். அவரோ தமது கைகளைக்கீழே தொங்கவிட்டு, என்னை நோக்கிப் புன்னகைகாட்டுவார். ஒருநாள் அவர் கைகளை உயர்த்தித் தமது கண்களால் வானத்தைநோக்கி: "நானே மாசில்லாத உற்பவம்" என்று சொல்லியருளினார். இக்தப்பதினைந்து நாட்களில் அந்த ஸ்திரி எனக்கு மூன்று இரகசியங்களைஅறிவித்து அவைகளை நான் ஒருவருக்கும் வெளிப்படுத்தப்படாதெனக் கற்பித்திருக்கிறார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# உடைந்த உள்ளம்

(திரு. எஸ். பால்ராஜ் — முசிரி)

அமலா "நேர்ஸிங்ஹோம்"மில் ஒரு தாயும், சேயும் படுத்திருந்தனர். அந்த நீண்டகூடத்தில் அமைதிநிலவினது. தாயுடைய கட்டிலின் அருகில் அந்த விடுதியைக்கவனிக்கும் லில்லியம்மை வந்தாள். தாய்பக்கத்தில படுத்திருந்த பாலன் தன்பொக்கைவாயைக் காட்டிப் புன்முறுவல்பூத்தான். லில்லியம்மை தன்னையே அறியாமல கண்ணீர்வடித்தாள். இதை அந்தத்தாய் கண்ணுற்ருள். அந்தத்தாயுள்ளம நெகிழ்ந்தது. "டக்ரம்மா! ஏன் அழுகிறீர்கள்? நீங்கள் எங்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியிருக்க நீங்களே அழுதால்!"

அவள் சொல்லிமுடிக்கவில்லை. டக்ரம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "அம்மா! இந்தச்சிசுஎனது பாழ்பட்ட வாழ்வை நினைவூட்டியது. என்னையே அறியாமல் கண்ணீர்பெருக்கெடுத்துவிட்டது" என்ருள்.

"ஏன், உங்களுக்குப் பிள்ளைகிள்ளை பிறந்து செத்துப்போய்விட்டதா? உங்கள் 'அவரு' இருக்கிருருங்களா?" என்று பெண்களுக்குள்ள துணிவுடன் அந்தத்தாய் கேட்டாள். "அம்மா! அது ஒருபெரியகதை. நான் அதை யாரிடமாகிலும் சொல்லித்தான் மன ஆறுதல் அடையவேண்டும். இல்லாவிட்டால் என்மனம் வெடித்துவிடும் போல் இருக்கிறது" என்று கதையை ஆரம்பித்தாள்.

"நான் பி. ஏ. வரையிலும்படித்தவள். சீருஞ்சிறப்பும்பெற்ற ஒருசெல்வனின் மகனுக்கு வாழ்க்கைப்பட்டேன். நாங்கள்இருவரும இன்பவாழ்வு வாழ்ந்தோம். எங்கள் இன்பத்தைப் பெரிதுபடுத்த எங்களுக்கு ஓர்ஆண்குழந்தை பிறந்தது. என்மாமனுர் அக்குழந்தைக்கு அமலன்என்று பெயரிட்டு அன்புடன் அதை வளர்த்துவந்தார். பிள்ளையைப் பெற்றகடன்தான் என்னுடையது. அதைப்பேணிவளர்க்கும் எல்லாப்பொறுப்பும் என்மாமனுருடையதாய் இருந்தது. பேரனின் மழலைமொழியில் அவர் மகிழ்ச்சிகண்டார். அவனைவிட்டுச்சிறிதுநேரம் பிரிந்திருக்கமாட்டார். இவ்வாறு ஆண்டுகள்ஐந்து ஓடின. நான் அப்போது வெகுஅழகாயிருப்பேன்."

"என் டக்ரம்மா, இப்பவும்தான் என்ன! அதுதான் கட்டுவிடாமே கன்னிப்பெண்போலக் கொள்ளைஅழகாய் இருக்கிறீர்களே" என்று குறுக்கிட்டாள் தாய்.

விம்மலுக்குஇடையில் டக்ரம்மா தொடர்ந்துசொன்னுள், "அறிவுஎன்னை அகங்காரியாக்கினது. அழகுஎன்னைச் சோதித்தது. நாகரீகமும், அழகும், அறிவும் என்னைஇழிசெயலுக்கு இட்டுச்சென்றன. ஒருகுழந்தை போதும், அநேகம் பிள்ளைகளைப்பெற்றுல் என் என்அழகு குன்றிவிடும், இன்பம் குறைந்துவிடும், பொறுப்பு அதிகப்படும், உல்லாசவாழ்வுக்குப் பங்கம்ஏற்படுமென்று கருதினேன். இவ்வாழ்வில் என்கணவரோடு முரண்பிடித்தேன். சுயநலங்கருதி அவரையும் இணங்கவைத்தேன். வேண்டாவெறுப்போடு அவர் உத்தரவுகொடுத்தார். நான்கர்ப்பத்தடை ஒப்பரேசன்செய்து கொண்டேன்."

"ஐயோ! டக்ரம்மா! இதுபாவமாச்சே! நாமஇப்படிச் செய்துகொள்ளலாமா? இது கடவுளுக்கடுக்காத துரோகமாச்சே! நாம்செத்தாலும் சாவோமேதவிர, இந்தக் கர்ப்பத்தடைமுறைகளைக் கையாடவே மாட்டோமென்று அவரும், நானும் சத்தியம் பண்ணியிருக்கிறோம். அம்மா! நீங்கள் கிறீஸ்துவர்கள், படித்தவர்கள் இப்படிச் செய்திருக்கிறீர்களே?"

"என்மதியை இழந்தேன். அப்போதுநான் கிறீஸ்துவளல்ல. இந்தகைய நன்நெறிமார்க்கத்தை அழுத்தந்திருத்தமாய், கண்டிப்பாய்ச்சொல்லுவதற்கு எங்களுக்கு ஆள்கிடையாதே. என்பருவம் பாழாகாமல் பரிமளித்தது. நான் இன்பத்தைச் சலிக்காது அனுபவித்தேன். ஆனல், ஒருநாள் விஷக்காய்ச்சலுக்குப் பலியானுன் என்மகன் அமலன். ம்...ம் ..ம்."

"அம்மா, அழாதிங்க! நாம்என்ன செய்யலாம்! கடவுள் கொடுக்கிருர்! கடவுள் எடுத்துக்கொள்ளுகிருர்!"

"நான் ஏக்கங்கொண்டேன். பிள்ளையின்பாசம் என்னைவாட்டியது. ஒரு குழந்தையைப் பெறவேண்டுமென்னும் ஆவல் என்னைச்சுட்டெரித்தது. ஏங்கினேன். ஆனல், நான் என்னையே அக்கிரமமுறையில் மலடியாக்கிக்கொண்டேனே. என்செய்வது? பைத்தியங்கொண்டவளைப்போல் நடமாடினேன். பேரனைப்பிரிந்த பெருந்துக்கம் ஒருபுறமிருக்க, நான்இனிமேல் மக்கட்பேறு இல்லாதவளானேன்என்ற உண்மையை அறிந்ததும் மாரடைப்பால்மாண்டார் என்மாமனுர். என் தகப்பனே எனது அத்தையின்வழக்கிலே என்பணத்தையெல்லாம் வீணுகச்செலவுசெய்து மனமொடிந்து மாண்டார். எனதுவாழ்க்கை இன்பத்திலிருந்து துன்பத்துக்கு மாறியது. என்கணவர் என்னை வெறுத்தார். மலரின் இதழ் உதிர்ந்த பின்னர் காம்பா மணங்கொடுக்கும்! என்கணவர் என்னுடன்வாழ விரும்பவில்லை. அவரும் வாரிசுக்கு ஏங்கினுர். என்னைவிவாகரத்துச்செய்துவிட்டார்."

"சே, என்னகொடூரம். நம்மவேதத்திலே இதெல்லாம் செய்யக்கூடாதம்மா. சிலஅக்கிரமம்பிடித்ததுகள் அப்படிநடக்கிறதுண்டு" என்ருள் அந்தத்தாய்."

"நான் வாழஆசைப்பட்டிருந்தால் வாழ்ந்திருக்கலாம். என்அழகுக்குஅநேகர்ஏங்கினுர்கள். ஆனல், நான் இந்தச் சீர்கெட்டஉலகில் சீரழிந்துவாழ விரும்பவில்லை. வாழ்க்கை என்னை வெறுத்தது. சாவு என்னைஅழைத்தது. நாகரீகம் என்னைநகைத்தது. சலனமற்றுஇருந்த அந்தநேரத்தில் எதையும்சிந்திக்க மனமின்றிநடந்தேன் கடற்கரையைநோக்கி. அலைமோதியகடலும் என்வருகையைக்கண்டு அமைதியுற்றது. எதையுஞ்சிந்திக்காமல் அதில்வீழ்ந்தேன்.

"கண்விழித்தேன், மூர்ச்சைதெளிந்தேன் — கனவா? நனவா? நான்ஓர் பெரியகட்டிடத்தில் படுத்திருப்பதை உணர்ந்தேன். இதுகனவல்லஎன்பதை நிரூபிக்க ஒருகுருவானவர் வந்தார். நான் கடலில்விழுந்ததையும், அப்பொழுது அவ்வழிக்குச்சென்று அவ்வழியேதிரும்பிய குருவானவரும், அவருடையசீடனும் என்னைக்காப்பாற்றியதையும் எடுத்துரைத்தார். என்னைப்பற்றி விசாரித்தார். அனுதாபங்கொண்டார். உடைந்தஉள்ளத்துக்கு ஆறுதலாய்இருந்தது அவரது இன்மொழி. அவர் என்னைக் காப்பாற்றியதற்காக நன்றியுடன் அழுதேன். சற்றுநேரம் அவர் மௌனமாயிருந்தார். பிறகு "அம்மா, நீயோ பி. ஏ படித்திருக்கிருய். எனதுமேற்பார்வையில் ஒரு பிரசவ விடுதி இருக்கிறது— அது 'அமலா நேர்ஸிங் ஹோம்.' அதில் நீவேலைசெய்யச் சம்மதமா?" என்ருர். அமலா விடுதி எனதுஅருமைமகனின் ஞாபகச்சின்னம்போல் அமைந்தது. நான் செய்த அக்கிரமத்துக்குப் பரிகரிக்க இவ்விடுதியே தகுந்தஇடமென்று எண்ணினேன். நான் இன்னும் வாழவேண்டும்போல் இருந்தது. சம்மதித்தேன். பொறுப்பைஏற்றேன். கிறீஸ்துவ உயர்ந்தகொள்கைகளை அறிய வாய்ப்புக்கிடைத்தது. கிறீஸ்துவை நேசிக்கத்தொடங்கினேன். கிறீஸ்துவளானேன். இப்போது இந்த நேர்ஸிங் ஹோமிற்கு நான் முழுப்பொறுப்பாளியானேன். என்பார்வையில் எத்தனையோ பிரசவங்கள் நடந்திருக்கின்றன.

கர்ப்பத்தடை முறைகளைப்பற்றி என்னை விசாரித்தவர்களுக்கு அதன் அக்கிரமத்தையும், அதனுல் கடவுளுக்கும், சமூகத்துக்கும், பெண்இனத்திற்கும் வரும் தீங்குகளையும் எடுத்துரைத்து அவர்களை நல்வழியில் இட்டுச்சென்றேன். இந்த உன்குழந்தையைப் பார்த்ததும் என்பழையவாழ்வே என்கண்முன்வந்துவிட்டது" என்று சொல்லிநிறுத்தினுள்.

"அம்மா, ஆக்கவும், அழிக்கவும் அவருக்கன்றி வேறுயாருக்கும் உரிமையில்லை. மாத்தை நாம்வளர்க்கிறோமென்றுல் கனிக்காகத்தானே வளர்க்கிறோ"மென்று அப்பெண்தாயன்போடு சொல்லுவதற்கும், பக்கத்திலிருந்த பாலகன் ஆமாஎன்றதுபோல் தலையை அசைத்துப் புன்முறுவல்செய்வதற்கும் சரியாயிருந்தது. அந்தநேரத்தில் இருவர்கண்களிலும் கண்ணீர் துளிர்த்து நின்றது. ஒன்று ஆனந்தக்கண்ணீர், மற்றென்று துன்பக்கண்ணீர்.

தி. இ. தா.

# பொதுவர்த்தமானம்

## விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலன்

"யுத்தம்ஒன்று நிகழுமானல் எல்லாமே அழிந்துபோகும்; அல்லது பெரும்பகுதி அழிவுக்குள்ளாகும்; யுத்தமில்லாதபோதிலும் கிரகங்கள் மீது நடைபெற்றுவரும் தாக்குதல் காரணமாகச் சந்திரன் இரண்டாகப் பிளந்து நச்சுப்பொருட்கள் மஸ்கோ நகர்மீதோ அன்றேல் வாஷிங்டன் நகர் மீதோ அன்றேல் ஒருபாவமுமறியாத ஏனையமக்கள்மீதோ விழுந்துநாசத்தை உண்டாக்கும்" என்று 86வயதுடைய பிரித்தானிய தத்துவஞானியான பேட்றண்ட் றஸ்ஸல்பிரபு கூறுகின்ருர். சென்ற 8-ந்திகதியன்று வெளிவந்த "பொதுஅறிவும், சவவாயுயுத்தமும்" என்ற தமதுபுத்தகத்தில் அவர் இவ்வாறுதெரிவித்திருக்கின்ருர். "தற்போதையகொள்கை தொடர்ந்து நடைமுறையிலிருக்குமானுல் சவவாயுக்குண்டுகள்தானும் நமக்கு அற்பமாகத் தோன்றக்கூடும்; ஆகவே, இராசதந்திரிகளின்மனதில் மாற்றம்ஏற்படவேண்டும்; கிழக்கு-மேற்கு அரசாங்கங்கள் பெரியயுத்தமொன்றுல் தாங்கள்நினைத்ததை அடையமுடியாதென்பதை உணர்த்தவேண்டும்" என்றும் றஸ்ஸல் பிரபு கூறியிருக்கின்ருர்.

## பரதகண்டத்தின் குடியரசுத்தினம்

நமது அயலநாடாகிய இந்தியா குடியரசுத் தினத்தைச் சென்ற 26-ந் திகதி கொண்டாடியதல்லவா? அதைப்பற்றிய சில விபரங்கள் வருமாறு: 12,69,640 சதுரமைல் விஸ்தீரணமுடைய இந்தியகுடியரசு வடக்குத் தெற்காய் 2,000 மைலுடையதாகவும், கிழக்குமேற்காய் 1,700 மைலுடையதாகவும் இருக்கின்றது. இங்கிலாந்திலும் 13 மடங்கு பெரியதாகவும், சோவியற் ரூஷியாவின் எழிலொரு பகுதியளவாகவுமுள்ள இந்நாடு உலகின் நிலப்பரப்பில் ஏழாவது பெரிய நாடாகும். கம்பீரமான இமயமலைகள் இதன் வடக்கு அரணுக வளர்ந்து நிற்கின்றன. திபெத்து, நேபாளம், சிக்கியாம, பாகிஸ்தான் முதலிய தேசங்கள் இம்மலைச்சாரலில் திகழ்கின்றன. கிழக்கிலிருக்கும் பல்வேறு மலைத்தொடர்கள் பர்மாவிலிருந்து இந்நாட்டைப் பிரிக்கின்றன. சீனுவுக்குஅடுத்ததாக இந்தியா உலகின் அதிக சனத்தொகையுள்ள நாடு. இதன் சனத்தொகை 35,68,29,485ஆகும். இதன் ஆண்-பெண் விகிதம் 947 பெண்களுக்கு 1,000 ஆண்களாகும். அந்தமான், நிக்கோபார் தீவுகளிலும், டெல்கிப் பிரதேசங்களிலுமே பெண்கள் அதிகம் குறைவாகக் காணப்படுகின்றனர். இதன் சராசரிச் சனச்செறிவு ஒருசதுரமைலுக்கு 312. இது மாகாணத்திற்கு மாகாணம் அதிகம் வேறுபடுகிறது. உதாரணமாக, டில்லியில் 3,017 ஆகவும், கேரளநாட்டில் 901 ஆகவும், அந்தமான், நிக்கோபார் தீவுகளில் 10 ஆகவும் காணப்படுகிறது. இந்தியாவின் 36 கோடிமக்களில் 6 கோடி, அல்லது 17·3 வீதமானேர் நகரங்களிலும், 30 கோடி, அல்லது 82·7 வீதமானேர் கிராமங்களிலும் வசிக்கிருர்கள். இந்நாட்டில் 308 பட்டணங்களும், 5,58,089 கிராமங்களும் உண்டு. மக்கள் வாழும் 654 லட்சம வீடுகளில் 541 லட்சம் வீடுகள் கிராமப் பகுதிகளிலும், 113 லட்சம்வீடுகள் பட்டணங்களிலும் இருக்கக் காணப்படுகின்றன.

## எட்டுஅவுன்ஸ் போதுமாம்

"தமக்குத் தெரிந்த ஓர்இரசாயனப் பொருளிலே ஒருஎட்டுஅவுன்ஸ் நிறைகொண்டது மாத்திரம் மனிதர் உட்படப் பூமியில் உயிர்வாழும் பிராணிகள் அனைத்தையும் நிர்மூலமாக்கப் போதுமானது" என்று கனடாதேச மொன்றியல்நகரில் சென்ற 20-ந் திகதி கூடிய இரசாயன தொற்றுநோய்க் கிருமி ஒழிப்பியக்க மகாநாட்டிலே உரைநிகழ்த்திய பிரித்தானிய விஞ்ஞானியான சேர் றெபேட் வாட்சன் வாட் கூறியிருக்கின்ருர் "அழிவுக்கு வழிகோலும் முதியவர்களைக் காலம் திருத்திவிடும்; ஆனல் அந்தநாள் வருமா என்பதே பிரச்சினை; அடுத்த பத்துவருடகாலம் பெருங் கெடுதியானது; இந்தக் குறுகிய காலத்துள் மனிதவர்க்கம் அழிவு காணுவிடின் எதிர்காலத்தில் நம்பிக்கைவைக்கலாம்" என்றும் அவர் கூறலாயினர்.

## வானவெளி செல்லும் முதல்மனிதன்

பூமியிலிருந்து வானவெளிக்குப் பறந்துசென்று உலகத்தைச் சுற்றிவரக்கூடிய அதிர்ஷ்டசாலியைக் கண்டு கொள்வதற்காக 110 அமெரிக்கர் தெரிவுசெய்யப் பட்டிருப்பதாக நியூயோர்க்நகரிலிருந்து சென்ற 27-ந்திகதி செய்திகிடைத்திருக்கிறது. இச்செய்தியைவெளியிட்ட வானவெளிநிர்வாக அதிகாரியான திரு. டி. கெய்த் கிளினன்என்பவர் பங்குனிமாத இறுதிக்குள் இத்தொகை பன்னிரண்டு பேராகக் குறைக்கப்பட்டுவிடுமெனத் தெரிவித்திருக்கின்ருர். வானவெளிக்குப்போகும முதல்மனிதன் "மெர்குறி கெஸ்ற்றேநாட்" என்று அழைக்கப்படுவாராம். இந்தப்பன்னிருபேருக்கும் பயிற்சியளிக்கப்பட்டபின் ஈற்றிலொருவரே தெரிவுசெய்யப்படுவாராம். இவர் ஓர் பட்டதாரியாகவும், நாற்பது வயதுக்குக் குறையாதவராகவும் இருப்பாரென்று திரு. கிளினன் கூறியிருக்கின்ருர்.

## அணுவாயுத வல்லரசராக மாறினல்!

சோவியற்ரூஷிய கம்யூனிஸ்தகட்சியின் 21-வதுமகாநாடு சென்றவாரம் மஸ்கோநகரில் கூடியபோது, அதில் ரூஷியவெளிநாட்டுமந்திரி திரு. அன்ரி கிறேமிக்கோ பேசுகையில், மேற்கு ஜேர்மனி அணுஆயுத வல்லரசாக மாறினல் மூன்ருவதுஉலகயுத்தம் தவிர்க்கமுடியாததென்று அதனைஎச்சரித்திருக்கின்ருர். மேலும் அவர் பேசியவிடத்து: "அணுஆயுத வல்லரசாக மாறுவதா? அன்றேல் ரூஷியா கூறும் யோசனைப்படி ஜேர்மன்சமாதானஉடன்படிக்கையில் கைச்சாத்திடுவதா? இதில் ஏதாவதொன்றைத்தான் மேற்குஜேர்மனி நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது; சர்வதேசஅமைதிக்கு இதுவே முக்கியபிரச்சினை; ஆனல், இதுவிஷயமாக ரூஷியாகூறும்எந்த யோசனையையும் முதலில்எதிர்ப்பவரான மேற்குஜேர்மன்பிரதமர் டக்றர் அடினேவர்அவர்கள் செயற்படுகின்ருர்; இதுவிஷயமாக ஓர்நல்லமுடிபு ஏற்படாவிடின் உலகசமாதானம்நிலைப்பது துர்லபம்" எனக் கூறலாயினர்.

# அஞ்சவேண்டாம் என்கிறார்

அன்று ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தபாப்பரசர் வறியபிள்ளைகளுக்கு வெகுமதிகள் வழங்கினார். இத்தாலியபிள்ளைகள் தங்கள் கிறிஸ்மஸ் வெகுமதிகளை மூவிராசாக்கள் திருநாளன்று பெற்றுக்கொண்டார்கள். இரண்டுசோடி இரட்டைப்பிள்ளைகள் பாப்பரசர் காணும்படியாகத் தங்கள் அரவணைப்புகளிலிருந்து உயரத் தூக்கி அவருக்குக் காண்பிக்கப்பட்டார்கள். அவர்களைக் கண்டதே பாப்பரசர் பெரிதும் சந்தோஷமுற்றவராய் அப்பிள்ளைகளின் தாய்மாரைப் பார்த்து, "அநேக பிள்ளைகளைக் கொண்டிருப்பதையிட்டு நீங்கள் அஞ்சவேண்டாம்; என்றைக்கும் நமது ஆண்டவரின் வரப்பிரசாதம் இருக்கிறது; இந்த உலகம் ஓர் பிரேத சேமக்காலையாய் இருக்கும்படி உண்டாக்கப்படவில்லை" எனக் கூறலாயினர். அதன் மேல் அவர் சென் வின்சென்ற் டே போலின் பிறர்சிநேக கன்னியாஸ்திரிமாரை அவர்களுடைய வரவேற்புஇல்லச் சிற்றாலயத்தில் சந்தித்துப் பேசியபோது: பசையிட்டு வைரமாக மினுக்கிய உங்களது தலைக் கவசங்கள் சில சமையங்களிலே "சிறிய வள்ளங்கள்" என்று அழைக்கப்படுகின்றன; ஆனால் அவைகள் அப்படியானவைகள் அல்ல; அவைகள் பரலோகஇராச்சியத்தை வெற்றிகொள்வதற்கென்று பாய்வலித்தோடுகின்ற பெரியகப்பல்களின் பாய்களாய் இருக்கின்றன" வெனக் கூறலாயினர். முதல் நாள் சனிக்கிழமையன்று — அதாவது 12-ம் பத்திநாத பாப்பானவர் மரணமடைந்து சரியாய் மூன்று மாதங்களின்பின் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய நிலவறைக்குச் சென்று தமக்கு முன்பிருந்த அவரது கல்லறை முன்பாக அமர்ந்து அவருக்காகச் செபஞ்செய்யலாயினர். 11-ம் பத்திநாதர், 15-ம் ஆசீர்வாதப்பர், கருதினல் மெறிடெல்வால் ஆதியோரின் கல்லறைகளிலும் வேண்டிக்கொள்ளலாயினர்.

—※—

# பாப்பாசர் ஆடம்பரங்களைக் குறைக்கின்றார்

பாப்பரசர் அன்றுஞாயிற்றுக்கிழமை 600 இத்தாலியருக்குப் பேட்டியளித்துப் பேசியபோது: நமக்குமுன்பாகத் தோன்றும் ஒவ்வோர்முறையும் மக்கள் முழந்தாட்படியிட வேண்டுமென்பதை ஓர்மனத்தாழ்மையாக நாம்கருதுகிறோமெனக் கூறலாயினர். "நாம் பாப்பரசர் ஸ்தானத்துக்குத் தெரியப்பட்டதுமுதல் நமது வாழ்க்கை ஆறுதல்களாலும், மனத்தாழ்மைகளாலும் வளம்பெற்றிருக்கிறது; இந்த மனத்தாழ்மைகளில் ஒன்று, நமக்குமுன்பாக ஒவ்வொருவரும் முழந்தாட்படியிடக் காண்பதே; அதனால் அவர்கள் ஒருநாளில் காலையிலும், மாலையிலுமாக இருதடவை மாத்திரமே முழந்தாட்படியிடவேண்டும்; அம்மட்டும் போதுமென்று நம்மோடு அதிகம் நெருக்கமாகப் புழங்கும் மக்களுடன் நாம் உடன்பாடாயிருக்கிறோம்" எனக் கூறிகின்றார். அன்று ஓர்பேட்டியில் சமுகமாயிருந்த ஐந்து மேற்றிராணிமாரும், அநேககுருமாரும் பாப்பரசருடன் வைத்து அதிகாரபூர்வமாக ஓர்பிரதிமைப்படம் பிடிப்பதற்கென முழந்தாட்படியிட்டிருந்தபோது, "இல்லை, இல்லை எழுந்து நில்லுங்கள்" என்று மகிழ்ச்சிப் பெருக்குடன் அவர் உரத்துக்கூறினர்.

## ஜப்பானின் எதிர்கால சக்கிரவர்த்தினி

ஜப்பானிய பட்டத்துக்குமாரனை அகிஹிற்றோ இளவரசர் திருமணஞ் செய்யவிருக்கின்ற அத்தேசத்து எதிர்கால சக்கிரவர்த்தினியான மிச்சிக்கோ ஷொடா எனும் பெண்மணி அங்கே திருஇருதயசபைக் கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவரும் இருகலாசாலைகளில் கல்வி பயின்றவள். கன்னியாஸ்திரிமாராலே மத்திய கலாசாலைஒன்றில் இவள் ஆறுவருடகாலமும், திருஇருதய சர்வகலாசாலையிலே நான்குவருடகாலமும் பயிற்றப்பட்டவள். இவள் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவள் அல்ல. ஆனால், இவளின் தந்தைவழியான பாட்டனும், பாட்டியும் கத்தோலிக்கராவர். ரோக்கியோ தலைநகரிலுள்ள திருஇருதயநாதரின் சர்வதேச சர்வகலாசாலை ஆங்கிலவகுப்பில் பட்டதாரியான இவள் திருஇருதயசபைக் கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவரும் கலாசாலைகள், சர்வகலாசாலைகளின் சர்வதேச மகாநாடு அப்போது பெல்ஜியதேச பிறசெல்ஸ் நகரில் நிகழ்ந்தபோது, இவள் ஜப்பானிய பிரதிநிதியாகத் தெரியப்பெற்றுச்சென்று அந்நகரிலும், ரோம், லண்டன் நகர்களிலும், ஐக்கிய அமெரிக்க தேசத்திலும் அச்சபைக் கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவரும் கல்விஸ்தாபனங்களையெல்லாம் பரக்கப் பிரயாணஞ்செய்து பார்வையிட்டுத் திரும்பினாள்.

## பாப்பரசரைத் தரிசித்தபின்னர்

80 வயதுடையவரான லூய்ஜி பெலெகிறினோஎன்ற வயோதிகர் பாப்பரசரைத் தரிசிப்பதற்காகத் தனது கிராமத்திலிருந்து 350மைல்தூரம் யாத்திரைசெய்து வத்திக்கான் போய்ச்சேர்ந்து அவரைத் தரிசித்தபின் மரணமாயினர். பெலெகிறினோஎன்ற இவரது பெயரின் அர்த்தம் "யாத்திரை"என்பது. இவர் பாப்பரசர் பிறந்த சொத்தோ இல் மொந்தே என்ற கிராமத்திற்குச் சமீபமாகப் பிறந்தவர். தான் பாடசாலையிலே படித்த காலமுதல் நன்றாய் அறிந்திருந்த பாப்பரசரைக் காண்பதற்காக இவர் ரோமைநகர்வரை முழுத் தூரத்தையும் கால்நடையாகவே நடந்துசென்றார்.

## தமியான் சுவாமியாரின் அப்போஸ்தலன்

கல்கத்தாநகரிலே கிறிஸ்தியன் பிறதர்மாரின் கலாசாலைஒன்றில் அப்போது பாலியன் ஒருவன் ஓர் மாணவனாயிருந்தபோது கலாசாலை பிறதர்மார்களில் ஒருவர் குஷ்டரோகர்களின் அப்போஸ்தலரான தமியான் சுவாமியாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் சம்பவத்தைப்பற்றி வர்ணித்துக்கூறினார். அவன்மனதில் அது வெகுவாகப் பதிந்துவிட்டது. அவன் தனது படிப்பை முடித்துப் பாடசாலையைவிட்டு வெளிகொண்டபின் சிலவருடங்களாகத் தனது முயற்சிகளைப் பார்க்கச் செல்லவில்லை. அதன்மேல் பாவசங்கீர்த்தனம் செய்யச் சென்றான். தமியான் சுவாமியாரின் வாழ்க்கைவரலாற்றை ஆர்வத்துடன் வாசித்தான். அதன்மேல் அவருடைய வாழ்க்கையையும், தொண்டுகளையும் பற்றிச் சம்பாஷணைகள்நடத்திப் பிரசாரஞ் செய்யத் தொடங்கினான். அவன் பேசியதைக் கேட்ட அமெரிக்க கத்தோலிக்கர் ஒருவர் அவனைக் குருமார்பலருக்கும் அறிமுகப்படுத்தும் கடிதங்கள் எழுதிக் கொடுத்தார். கடந்த ஏழு வருடங்களாகத் தமியான் சுவாமியாரைப்பற்றியும், அவர் தொண்டாற்றிய மொலக்காய் தீவைப் பற்றியும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் சகல சமூகத்தினரையும்கொண்ட கூட்டங்களிலே பிரசாரஞ் செய்துவிட்டுத் திரு. ஜோண் ஹொப்ஸ் என்ற இவர் தற்போது அதே நோக்கமாக லண்டன்நகர் போய்ச் சேர்ந்திருக்கிறார்.

## நூற்றாண்டு விழா யாத்திரை

லண்டன்நகரிலே பிரசுரமாகும் "யூனிவேர்ஸ்" என்ற பிரபல கத்தோலிக்க பத்திரிகை ஆரம்பமான நூற்றாண்டுவிழா அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டிலே கொண்டாடப்படவிருக்கிறது. ஆரம்பத்தில் ஒரே அச்சியந்திரத்தில் ஒரே மனிதரால் கொண்டு நடத்தப்பெற்ற இப்பத்திரிகை காலகதியிலே விருத்திபெற்றுத் தற்போது மூன்றுலட்சம் பிரதிகளுக்குமேல் பிரசுரஞ் செய்துவருகின்றது. ஆங்கிலபாஷை பேசப்படும் இடங்களிலெல்லாம் தற்சமையம் இது வாசிக்கப்பட்டு வருகிறது. இதன் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளுள் ரோமாபுரிக்கு நடத்தப்படும் திருயாத்திரையும் ஒன்றாயிருக்கும். இதிலே கலந்துகொள்ளுமாறு இப்பத்திரிகை தனது வாசகர்களை அழைத்திருக்கின்றது. இந்த யாத்திரை 1960-ம் ஆண்டின் பெரியவியாழக்கிழமை லண்டனிலிருந்து ஆரம்பமாகி ஏறக்குறையப் பத்துத் தினங்களின்பின் முடிவாகும். அதனால், யாத்திரிகர்கள் ரோமாபுரியிலே பரிசுத்த வாரத்துப் பெரிய திருச்சடங்குகளைக் கண்டுகொள்ளக் கூடியோராவார்கள்.

—※—

# இரட்சகரின் திருஅங்கிக் காட்சி

சென்றவருடம் லூர்து திருப்பதி கத்தோலிக்கமக்களின் திருயாத்திரைக்கு மத்திய தானமாய் இருந்ததுபோல இவ்வருடம் நம் திருமீட்பரின் திருஅங்கிக் காட்சி நடந்தேறவிருக்கும் ரிறெர் (ரிறெவெஸ்) நகர் இருந்துவரப் போகிறது. "தூனிக்" என அறியப்படும் இத்திருஅங்கி தையல் பொருத்து இல்லாதது. இரட்சகர் சிலுவையில் அறையப்பட்டபோது ரோமைப் போர்வீரர்கள் இதற்குத்தான் திருவுளச்சீட்டுப் போட்டார்கள். புராதன பாரம்பரியப்படி, இதுவும் எலேனா சக்கிரவர்த்தினியாலே உண்மையான திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்ட அதேகாலத்தில் கண்டறிந்தெடுக்கப்படலாயிற்று.

நான்காம் நூற்றாண்டிலே ரிறெர்நகர் மேற்றிராணியாராயிருந்த அக்றிசியுஸ்மூலமாக இத்திருப்பண்டத்தைச் சக்கிரவர்த்தினி அந்நகருக்கு வழங்கலாயினாள். அப்போது ரிறெர்நகர் அவள்குமாரனை கீர்த்திவாய்ந்த கொன்ஸ்ரன்ரீன் சக்கிரவர்த்தியின் மேற்குத்தலைநகராய் விளங்கியிருந்து, அக்காலத்திலே இரண்டாவது ரோமைநகரெனக் கருதப்பட்டுவந்தது. அநேக நூற்றாண்டுகளாக இத்திருஅங்கி எப்போதாவது காட்சிக்கு வையாது சேமமாகப் பாதுகாக்கப்பட்டுவந்தது. ஆனால், 1512-ம் ஆண்டு மக்ஸிமிலியன் சக்கிரவர்த்தி ரிறெர் நகரிலே பாராளுமன்றம் கூட்டியபோதுதான் பொதுசனங்கள் இதனைக் கண்டுகொள்ளும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

சகல கோவில்களிலும், மடாலயங்களிலும் செபங்கள்செய்து ஒப்புக்கொடுக்கப்பட்டபின் அப்போதிருந்த அதிமேற்றிராணியார் பெரிய பலிபீடத்தைத் திறந்து, அதனுள்ளே "இது நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமான யேசுக்கிறீஸ்துநாதரின் தையல் பொருத்தில்லாத தூனிக்" எனும் வார்த்தைகளைக் கொண்ட பெரிய முத்திரையுடன் கூடிய பலமான பேழை ஒன்று இருக்கக்கண்டார். இன்றுவரை இத்திருஅங்கியானது பாப்பரசரின் விசேஷஅனுமதியைப் பெற்றுத்தான் பொதுசனங்களுக்குக் காண்பிக்கப்படுகிறது. இது கடைசிமுறையாக 1933-ம் ஆண்டு காட்சிக்கு வைக்கப்பட்டது. அப்போது 21 லட்சத்து 90 ஆயிரத்து 121 யாத்திரிகர்கள் இதனைத் தரிசித்துத் திரும்பினார்கள். ரிறெர்நகர் வனப்புவாய்ந்த ஸார்காட்டின் மத்தியிலே பிரான்ஸிய, லக்ஷெம்பேர்க் நாடுகளின் எல்லைகளுக்கு மிக அண்மையில் உள்ளது.

### மாசிமாதம்

**பொதுக்கருத்து:** நமதுகாலத்து லோகாயதக் கொள்கையை ஒறுத்தலினாலும், ஒருசந்திப் பழக்கத்தினாலும் திறம்பட எதிர்க்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து:** சிறுவில் பொதுவுடைமைக்காரரின் மறைமுகமான சூழ்ச்சிகளினால் கிறீஸ்துவர்கள் திருச்சபையின் ஒருமைப்பாட்டிலிருந்து பிரிந்துபோகாமல் இருப்பதற்காக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
மாசிமாதம் 5-ந் திகதி

**அமலோற்பவ மரியநாயகிசபை**

## அதிசிரேஷ்ட சுவாமிகள்

அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள்சபை அதிசிரேஷ்டரான மகாவண. லேயோ டெசாற்றெல் சுவாமியவர்கள் கொழும்பு அதிமேற்றிராணியாரது அழைப்பின்பேரிலே இன்று தினம் ஆரம்பமாகவிருக்கும் அதிமேற்றிராசன சற்பிரசாதசமாகமத்தில் சமூகமாயிருக்குமாறு சென்ற சனிக்கிழமை இலங்கைக்கு முதன்முதலாக விஜயஞ் செய்திருக்கின்றார். மரியநாயகி குருபரித்தியாகிகளான இவரின் ஞானப்புதல்வர்களுக்கு எமது நாடுஎவ்வளவோ தூரம் கடமைப்பட்டிருப்பதாலே சுவாமிகளுக்கு மிகுந்தகுதூகலத்தோடும், நன்றியுணர்ச்சியோடும் நல்வரவு கூறுகின்றோம். சுவாமிகள் இலங்கைக்கோ, அன்றேல் இலங்கை மக்களுக்கோ அந்நியர் அல்ல. ரோமாபுரியைத்தரிசித்த இலங்கையாத்திரிகர்கள் அங்குள்ள சபைப்பிரதமமடத்திலே சுவாமிகளைச்சந்தித்தபோது, அவர் எத்துணை மனோற்சாகத்துடன் தங்களை வரவேற்றாரென்பது இன்றைக்கும் அவர்களின் ஞாபகத்தில் இருந்துவருகின்றது. நமதுபிரச்சினைகளிலும், இந்த மிஷன்நாடுகளிலே திருச்சபையின் அபிவிர்த்தியிலும், மகாகரிசனைகொண்டுள்ள ஒருவரை நமதுமேற்றிராணிமாரும், குருமாரும் அவரிலேகண்டுள்ளார்கள். அவர் இலங்கைமட்டிலே ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளவர். எம்மத்தியிலே மிகநன்றாக அறிந்த எவரைக்காட்டிலுமே இலங்கைத் திருச்சபையையும், அதன்சரித்திரத்தையும்பற்றி அதிகம் நன்கு அறிந்தவர். கனடாதேசமொண்றியல்நகரிலே 1899-ம்ஆண்டு பிறந்தஅவர், கடந்தநாற்பது ஆண்டுகளாக ஓர்அமலோற்பவி சபைக்குரவராய் இருந்துவருகின்றார். இத்தனைவருடங்களிலும் முப்பதுஆண்டுகளுக்குமேல் அவர் தமதுஞானக்குருவாகிய காலஞ்சென்ற கருதினால்வில்லேனுவேஆண்டவருடன் நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தார். யுத்தம்முடிந்தபின் உண்டான கஷ்டகாலத்திலே இவர் தமது சபையைவழிநடத்துமாறு அதிசிரேஷ்டராகத் தெரியப்பெற்றார். சிறந்தபயிற்சிபெற்ற குருமாரை ஆக்குவதிலே அவர் பெரிதும் கரிசனை கொண்டுள்ளவர். அத்துடன் கத்தோலிக்கசேவையிலும் மிக்கானகரிசனைகொண்டவராய்ச் சாதாரணகத்தோலிக்கரும் அப்போஸ்தலதொண்டில் பயிற்சிபெறவேண்டுமென்ற மிக்கானஆர்வமுடையவர். தமது பாரமானகடமைகள், உத்தரவாதங்கள்மத்தியில் எப்போதுமே தமதுவதனத்தில் புன்னகை பொலிந்தவண்ணம் காட்சியளிப்பார். அவர் பேச்சுத்திறமையுடையவர். விசேஷமாகப் பிரான்ஸியபாஷையிலே சிறந்த பேச்சாளர். அதிமேற்றிராசன சற்பிரசாதசமாகமம் பூர்த்தியடைந்தபின் இம்மாதம்10-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை அவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யவிருக்கின்றார். சுவாமிகளுக்கு நல்வரவாகுக!

---

## சுதந்திர தினவிழா

ஸ்ரீலங்காவின் சுதந்திரஞாபக தினவிழா மற்றுமோர்தரம் சுற்றிச்சுழன்றுகொண்டு நேற்றைத் தினம் வந்துபோனது. ஆனால், இந்தவிழா இந்நாட்டுமக்களுள் ஒருபாலாருக்குச் சுபதினமாகவும், மற்றோர்பாலாருக்குத் துக்கதினமாகவும் கழிந்துபோனது. தமிழ்மொழிக்கு 'நியாயமான அளவு' உபயோகஉரிமைஅளிப்பதே அரசாங்கத்தின் கொள்கையென்று சொல்லிக்கொண்டு—அதற்கெனத் தமிழ்மொழி உபயோக மசோதாஎன்ற ஓர்சட்டத்தையும் கடுமையானஎதிர்ப்புகள் மத்தியிலே ஆக்கிவைத்துக்கொண்டு—தனிச்சிங்களகொள்கையைச் சாத்தியமான வழிகளிலெல்லாம் சாதித்துக்கொண்டு வருவதைக் கவனிக்கும்போது—இவைகள்போதாவென்று நீதிஸ்தலநடவடிக்கைகளைச் சிங்களமயமாக்கமுனைந்து உதவிநீதிமந்திரி பாராளுமன்றத்தில் எடுத்தாண்டுள்ள பிரேரணையைக் கவனிக்கும்போது—இன்னும்போதாவென்று பாராளுமன்ற நடவடிக்கைகளையெல்லாம் சர்வசிங்களமயமாக்க வேண்டுமென ஆங்கிலம்தெரியாத கொழும்புமத்திய தொகுதி அங்கத்தவர் திரு. தேமிஸ்என்பார் பாராளுமன்றத்தில் கொண்டுவந்துள்ள மற்றோர் பிரேரணையைக் கவனிக்கும்போது—தார்ஸி வித்தாச்சிஎன்பவர் வெளியிட்டுள்ள "அவசரநிலைமை'58" என்ற நூலில் காணும் படுபயங்கர சம்பவங்களைக் கவனிக்கும்போது — வவுனியா பிரதிநிதி திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் பாராளுமன்றத்திலே சென்றவாரம் பேசியவைகளையெல்லாம் கவனிக்கும்போது—இவைகளையெல்லாம் ஆராய்வாகச் சிந்திக்கும்போது புண்பட்ட தமிழ்இனம்—புண்பட்ட தமிழர் மனம் சுதந்திரதினவிழாவைக் கொண்டாட அப்படியென்ன கண்கெட்டனவா? என்று யாராவதுகூறுவாராயின் யாதுபிழை காணமுடியும்? சுதந்திரமாக வாழுகிறவர்கள் சுதந்திர தினவிழாவைக் கொண்டாடினால் சுதந்திரமாக வாழாதவர்கள் அதனைக் கொண்டாடாதிருந்தால் இது அவர்களின் குற்றமன்று. ஆனால், நாட்டின் சுதந்திரத்திற்காகத் தமிழரும் ஒத்துழைத்தார்கள் — ஊக்கமாக உழைத்தார்களென்பது மறுக்கப்படமுடியாததொன்று. நிற்க, இன்றைய நிலைமையே எத்தகைய இடுக்கண்கள் உண்டானபோதிலும் தமிழ் மக்களும் இந்நாட்டுமக்கள்தான், அவர்களும் இந்நாட்டில் என்றும்போல வாழத்தான் வேண்டும்; "தன் கையே தனக்கு உதவி" என்ற சுலோகத்தை அன்னார் உளத்திற்கொண்டு, உத்தியோகத்தை நம்பிக்கொண்டிராது உழைப்பில் ஈடுபட்டு — கமத்தொழில், கைத்தொழில், வியாபாரத்தொழில் ஆதியவற்றில் ஊக்கமாகஈடுபட்டு தன்மானமுள்ளவர்களாய் வாழ்ந்து, சிக்கனமாகச்சீவித்துத் தம்இனத்தின்பெருமையைக்காத்துவைக்க வேண்டும். வாழ்வும்தாழ்வும், இன்பமும் துன்பமும், பகலும் இரவும்மாறிமாறிவந்துகொண்டுதான் இருக்கும். இன்றைய ஆட்சி என்றைக்கும் நிலைத்திருக்கும்; இன்றையநிலைமை என்றைக்குமே நீடித்திருக்குமென்று எவரால்நிச்சயித்துக் கூறமுடியும்?

---

### இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியர்கள்

இளைப்பாறியிருக்கும் சகல விஞ்ஞானஆசிரியர்களையும் மீண்டும் பகுதி நேரவேலைக்கு அழைப்பதெனக் கல்விமந்திரிகாரியாலயம் தீர்மானித்திருக்கிறது. போதியவிஞ்ஞான ஆசிரியர்கள் கிடைப்பதிலுள்ள கஷ்டங்கள் காரணமாகவே அரசாங்கபாடசாலைகளிலிருந்து இளைப்பாறிய விஞ்ஞானஆசிரியர்களை அமர்த்துவதென முடிவுசெய்யப்படலாயிற்று.

### பாப்பரசரின் முடிசூட்டுவிழாப் படக்காட்சி

பரிசுத்தபிதா 23-ம்அருளப்ப பாப்பரசரின் திருமுடிசூட்டுவிழாப் படக்காட்சி (கலர்ப்படம்) யாழ்ப்பாணம், றீகல்தியேற்றரிலே நேற்றுப்புதன் கிழமை (4-2-59) ஆரம்பமாகிநடைபெறுகிறது. மாலை 4-30, 6-45, இரவு 9-45மணிக்குமாகத் தினசரிமூன்று காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. மூன்றுகாட்சிகளுக்குமட்டும் காண்பிக்கப்படவிருக்கும் இப்படக்காட்சி 6-2-59 வெள்ளிக்கிழமையுடன் முடிவாகவிருக்கின்றது. இக்காட்சியிலே,

1. முடிசூட்டுவிழாவின் மகாகவர்ச்சிகரமான திருவைபவம்முழுவதையும்,

3. சமுத்திரம்போலத் தேங்கியிருந்த மக்கள்குழாம் கண்டுகளிக்கும்படியாக அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய பால்கனியில் மங்களகரமாக நடைபெற்றதிருமுடிசூட்டுவைபவத்தையும்,

3. உலகின் மிகப்பிரமாண்டமான தேவாலயத்தில் நான்குமணிநேரமாக நடந்தேறிய ஆடம்பரதிருச்சடங்குகளையும்,

4. பாப்பரசர் பால்கனியிலிருந்து ரோமாபுரிக்கும், உலகத்துக்கும் தம்முடையமுதலாவதுஆசீர்வாதம் அருளியதையும்,

5. பன்னூற்றுக்கணக்கான பாடகர்களால் பாடப்பெற்ற திவ்வியபூசைச் சங்கீதத்தின் மாட்சியையும்,

7. அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலும் வெளியிலும் கூடியிருந்த 2,00,000 பேருக்குமேற்பட்ட மகாசனக்கூட்டத்தின் பிரமிக்கத்தகுந்தகாட்சியையும்,

7. பழைய,புதியநித்தியநகராகிய ரோமாபுரியின் அழகியகாட்சியையும் பார்த்துமகிழலாம்.

### ஆசிரியபயிற்சிக் கலாசாலைப் பிரவேச வகுப்புகள்

இம்மாதம் 2-ந்திகதி கொழும்புத்துறைத் தாபனத்தில் ஆசிரியபயிற்சிக் கலாசாலைப் பிரவேசவகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. இவ்வகுப்புகளிற் பங்குபற்றவிரும்புவோர்வண. அதிபர் சுவாமியார் அவர்களிடம் வேண்டியஒழுங்குகள் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுவாமி, வ. நீயோகுப்பிள்ளை,
அதிபர்.

---

### ஆஸ்பத்திரிக் கன்னியாஸ்திரிமார்

தாதிமாராகக் கடமையாற்றும் கத்தோலிக்க கன்னியாஸ்திரிமார்களை அடுத்தமாத ஆரம்பத்திலிருந்து பகுதி பகுதியாக வேலையிலிருந்து நீக்குவதற்கு அறிவித்தல்கள்கொடுக்கச் சுகாதாரஅமைச்சு உத்தேசித்திருக்கிறது. குருநாகல ஆஸ்பத்திரியில் கடமையாற்றும 12கன்னியாஸ்திரிகள்தான் இந்த வேலைநீக்கஅறிவித்தல் பெற்றுக்கொள்ளும் முதல்பகுதியாகும். அடுத்தமாத முடிவில் அவர்களுக்கு இவ்வறிவித்தல் போய்ச்சேரும் கடமையிலிருந்து விலகும்போது எத்தகையநஷ்டஈடு அவர்களுக்கு அளிக்கப்படுமென்பதுபற்றி இதுவரை ஒருதகவலுமில்லை. அவர்களுக்கு எத்தகையநஷ்டஈடு அல்லது உபகாரச்சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்பதுபற்றி ஒருமனு சமர்ப்பிக்கமுன்வந்த கத்தோலிக்க அதிகாரிகள் அதற்கானதிட்டத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லையென்று சுகாதாரப் பகுதித்தலைவர் டக்டர் டி. எல். கறுவித்த தெரிவித்திருக்கின்றார்.

### தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கம்

மகாறகமை ஆசிரியப்பயிற்சிக்கல்லூரி, பேராதனை விவசாயக்கல்லூரி, கொழும்புத் தொழில்நுட்பக்கல்லூரி ஆகியவற்றில் மொழிகாரணமாகத் தமிழ்மாணவர்கள் பயிற்சிபெறுவதுகஷ்டமாகிவிட்டது. இந்நிலையில் தமிழ்மாணவர்களுக்கு உதவிசெய்யத் தமிழ்ச் சர்வகலாசாலைக்கழகம் முன்வந்திருக்கிறது. இந்திய, லண்டன் பரீட்சைகளுக்கு அதிகமான தமிழ்மாணவர்களைத் தயார்செய்யவும், அவர்களுக்கு விஞ்ஞான, எஞ்ஜினியறிங் பயிற்சியளிக்கவும் அது ஒழுங்குகள் செய்துள்ளது. இப்பயிற்சி அளிப்பதற்கென்று திரிகோணமலையில் ஓர்கல்லூரி அமைக்கப்படும். இதுவே தமிழ்ச்சர்வகலாசாலையின் உற்பத்தியாயிருக்குமெனத்தெரியவருகிறது. திரிகோணமலையிலே கல்லூரியை அமைப்பதெனச் சென்ற சனிக்கிழமைநடைபெற்ற கழக இயக்கப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இயக்கத்தின் இப்போதைய தலைவர் சேர் துரைசாமி அவர்கள் இளைப்பாறவிரும்பியதால் இவரிடமாகச் சட்டக்கல்லூரியின் முன்னைநாள்தலைவர் திரு. சிறிற்றே முத்துநாயகம் அவர்கள் புதியதலைவராகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கிறார்.

---

● ஐக்கியஅமெரிக்க தேசத்துடன் சமீபத்திலேபுதிதாய் 49-வதுநாடாகச் சேர்க்கப்பட்டுள்ள அலஸ்காவில் ஏறக்குறைய 22,500 கத்தோலிக்கர் இருக்கின்றார்கள். இவர்கள் ஜூனியோ மேற்றிராசனத்திலும், அலஸ்கா விக்காரியத்திலும் அடங்கியுள்ளார்கள்.

● அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே அறிக்கைப்பலிபீடத்தின்முன்பாக அன்று ஒருதொகையான மக்கள் செபஞ்செய்துகொண்டிருந்தபோது ஏறக்குறைய எவருமேஅறியாமல் பாப்பரசரும் உள்ளேசென்று அவர்களுடன் சேர்ந்து செபஞ்செய்தார் அவர் தமதுஅந்தரங்க காரியதரிசியுடன்மாத்திரமே அங்கு சென்றிருந்தார்.

## சிரிப்பும் சந்தோஷமும்

சந்தோஷத்தினுற் சிரிப்புண்டாகிறதா? அன்றேல் சிரிப்பினுற் சந்தோஷமுண்டாகிறதா? எனுங்கேள்விகளுக்கு விடை அவ்விருவகையினுலும் உணடென்றே சொல்லவேண்டும். எங்ஙனமெனில், நமக்குச் சந்தோஷம் உண்டாகும்போது சிரிக்கின்றோம்; சிரிப்புண்டாகும்போது சந்தோஷிக்கிறோம். சிரிப்பும், சந்தோஷமும் இணைபிரியாத நேசர்கள், அல்லது சகோதரர்கள் எனினும் அமையும். மனதிற் சந்தோஷமுண்டாகும்போது முகத்திற் புன்சிரிப்பாயினும் தோன்றுது போகாது. முகத்தில் புன்னகை தவழுகையில் அகத்தில் உவகையில்லாமற் போகாது. நெருப்புக்கும், புகைக்கும் எவ்வளவு சம்பந்தமுளதோ அவ்வளவு சம்பந்தம் சந்தோஷத்திற்கும், சிரிப்புக்கும் உளதென்று திண்ணமாய்க் கூறலாம். "புகையின்றி நெருப்பில்லை" என்ற பழமொழிபோல, "சிரிப்பின்றிச் சந்தோஷமில்லை" எனவும் மொழியலாம். ஆயின், சந்தோஷம் முதல் உண்டாகிறதோ, அல்லது சிரிப்பு முதல் உண்டாகிறதோ எனில், அதனை வரையறுத்துக் கூறுதல் எளிதன்று. அஃது எப்படியாயினு மிருக்கட்டும். நாம் இங்குஆராயப்புகுந்தது "சிரிப்பின்பயன்" பற்றியேயாதலின், அதன்கண் சிறிது சிந்தனையைச்செலுத்துதல் நன்று.

சிரிப்பானது மனத்தினுடையவும், சரீரத்தினுடையவும் தத்துவபலத்தை எப்போதும் எழுச்சியுறச் செய்யும் தன்மை வாய்ந்தது. அது ஆத்துமத்தின் பலகணிகளைத் திறந்துவிட்டுப் பயம், கவலையாதிய பிசாசுகளின் சாயைகளைச் சிதறடிக்கத்தக்க சூரிய கிரணங்களை உள்ளே வரவிடுகிறது. பயம், திகில், கவலை முதலியவை தேகத்திற்கு விளைக்கும் கெடுதிகள் கொஞ்சமன்று. அவை சீவியஊற்றை உலரச்செய்து வாயில் ஊறும் அமிர்தசலத்தைத் தடுத்துவிடவே, நா உலர்ச்சியுற்று மேல்அண்ணத்தில் ஒட்டிக்கொள்ளும். ஈரல், இரைப்பை முதலிய சிலஉறுப்புக்களின் தொழில்களை மந்தகதியாக்கும் அல்லது முற்றுமே நிறுத்திவிடும். இத்தத் தாறுமாறுகளையெல்லாம் சரிப்படுத்தும் சக்தி சிரிப்புக்கு உண்டு. சிரிப்பு நமது உடலுக்குள்ளேயிருக்கும் பல உறுப்புக்களாகிய சக்கரங்களை உல்லாச இசைச்சலுடன் சுழலச்செய்து, இரத்தத்தை நரம்புகளூடேயும், இரத்த நாடிகளூடேயும் புதுப்பலத்துடன் ஓடச்செய்கின்றது. நாம் சப்தமுண்டாக "அ அ, ஆஹா" எனக் கெக்கட்டமிட்டுச் சிரிக்கையில், வயிறு எழும்பியெழும்பிக் குதிக்கிறபடியால் விசுவாசமுள்ள பணியாட்களாகிய ஈரலும், இரைப்பையும் குதூகலமாய்க் குலுக்கப்பட்டுத் தங்கள் சீரணத் தொழிலை நன்கு நிகழ்த்துவதன்றி, பித்தப்பையினின்று பித்தநீரைக் கிரமப்படி வெளிப்படுத்திக் குடல்களிலுள்ள மலத்தைக் கீழ்நோக்கி இறங்கச்செய்கின்றது. இதன்பயனுக உடலின் உள்ளுறுப்புக்கள் தத்தம் தொழிலைச் செவ்வனே ஆற்றித் தேககலனுக்குத் துணைபுரிதலால், சிரிப்பானது மனுஷருக்கு ஓர்உற்சாகமருந்தாகவும், ஒருபலவர்த்தனியாகவும், சுருங்கச் சொல்லுமிடத்து ஒரு சீவாமிர்தமாகவும் உதவுகின்றதெனத் தடையின்றிச் சொல்லலாம். அதனுல், அது ஆயுளை வளர்க்கும் அரிய சஞ்சீவியேயாகும்.

இத்துணை நலம்விளைக்கும் இந்தச் சிரிப்பைத் தேகசுகங் கோருவோர், ஆயுள்விருத்தி விரும்புவோர் அனைவரும் அன்புடன் பேணிவளர்ப்பாராக! சிரிப்பென்பது மானிட சிருஷ்டிக்கு மாத்திரம் அளிக்கப்பட்டதோர் அரிய மங்களகரமான கொடையாகும். வேறெந்தச் சிருட்டிக்கும் இக்கொடை கொடுபடவில்லை. ஆதலால், மனுஷன் இந்தக் கல்யாணகுணத்தைப் பொன்னேபோல் போற்றி வளர்ப்பானுக! நகைச் சுவையினை நண்ணுவானுக! சிரிப்பைக் காசுபணங் கொடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமின்று; கடன்வாங்க வேண்டுவதின்று. அது வெகுசுலபத்தில், இச்சாமாத்திரத்தில் இலவசமாகப் பெறக் கூடியதே. ஆகவே, இதனைவாசிக்கும் நண்பர்காள், நேயர்காள் சிரிப்பைச் சதாகையாளுங்கள்! காலைத்துயில் நீங்கியெழும்பொழுதே ஒரு சிரிப்புடன் எழுந்திருங்கள். அடுத்தடுத்து நகையாடும் வழக்கத்தைப் பயிலுங்கள். சந்தோஷ, அல்லது சுபகாரியத்திற்காக மட்டுமல்ல, ஒருகவலை, ஒருதுயரம், ஓர்அவலூறு நேர்ந்தவிடத்தும் சிரியுங்கள். சிரிப்பினுல் அத்துயரங்களைப் போக்கப் பழகுங்கள், நன்றுய்ச் சிரியுங்கள், உடல் குலுங்கச் சிரியுங்கள், தாராளமாய்ச் சிரியுங்கள், ஏராளமாய்ச் சிரியுங்கள், சதா சிரியுங்கள்! சிரிப்பு விஷயத்தில் உலோபஞ்செய்யவேண்டாம், வறியராயிருக்கவேண்டாம்; தனிகராயிருங்கள், கோடீசுவரராயிருங்கள். நீவிர் நன்குக நெடுநாள் வாழ்வீர்கள். அங்ஙனமே ஆகுக!

---

## கடற்கரையில்

சென்றதைமாதம் 24-ம், 25-ம் திகதிகள் கடற்கரைவாழும்மக்களின் நன்னுட்கள் எனலாம். ஏனெனில், அன்று அவர்களின் பாதுகாவலரான அர்ச். செபஸ்தியாம்முனியோரின் திருநாள் ஆகும். திருநாளுக்கு முந்தியநோவினைகள் விமரிசையாக நடைபெற்றன. ஒன்பதாம்நாள் — அதாவது 24-ந்திகதி சனிக்கிழமைமாலை 8 மணியளவில் பெரியதெருக் கட்டளைக்குரவரும், தோப்புக் கட்டளைக்குரவரும் துணைபுரியப் பெரியமுல்லைக் கட்டளைக்குரவரால் மாலைஆராதனை பாடப்பட்டது. ஆலயம் மின்சாரதீபங்களாலும், பலவர்ணக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்க மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 5மணிமுதல் 6மணிவரையும் திவ்வியபூசைகள் நிறைவேறின. அன்று மாலை 4-30மணியளவில் சீரில் ஓடும் வள்ளஉருபத்தில் மிகநேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்த மோட்டர்இரதத்தில் கட்டளைக்குரவரால் திருச்சுரூபம் எழுந்தேற்றம் செய்யப்பட்டதும் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாகவே, பாண்டுவாத்தியங்கள்முழங்க, மக்கள் "நேசபாதுகாவலான தூயசெபஸ்தியாம்" என்ற கீதத்தைப்பாடினர். திருச்சுரூபம் அழகுறச்சிங்கரிக்கப் பட்டிருந்த கடற்கரைத்தெரு, அலஸ்தெரு, கருணைசிங்கபிளேஸ், ஹாயின்ஸ்பிளேஸ், செயிற்றறித்தெருமுதலாம் வீதிகளினூடாகச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுவரப்படலாயிற்று.

பின்னர் கட்டளைக்குரவரால் திருச்சுரூப ஆசீர்வாதம் அருளப்பட்டுத் தேவநற்கருணை ஆசீர்வாதத்துடன் திருநாள் இனிதேமுடிவடைந்தது.

— திருபர்

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**பாலர்தினம் :**

25-ம்நாள்(25-1-59) ஞாயிறன்று காலை 6-45மணியிருக்கலாம். நமது பங்குத் தேவாலய மணிகள் ஆனந்தமாகஆர்ப்பரிக்கவே பங்கைச்சேர்ந்த பாலபாலிகைகள், சிறுவர்சிறுமிகள் யாவரும் திவ்வியபாலகயேசுவின் கொடிகளைத்தாங்கி உல்லாசநடைபோட்டு, தங்கள் பெற்றோர்காங்களிவிவர்த்தும் ஆலயத்தைஅடைந்தனர். நவதினங்களாகப் பிரத்தியேகபீடத்தில் திவ்வியபாலகயேசு வீற்றிருந்து, திவ்வியபூசை, நவநாட்செபங்கள், காணிக்கைகளைஏற்று, அன்று தம்போன்ற சிறுவர்களோடு ஆலயவீதிவழியே பவனிவர ஆயத்தமாயிருந்தனர். இதோ! திருச்சிலுவை முன்செல்ல, பங்குப்பிள்ளைகள் வரிசைக்கிரமமாகக் கொடிகளேந்திப்பின்தொடர, திரீஸ்துவர்கள் செபங்களோதிநடக்க, பூசைப்பரிசாரகசிறுவரின் கரங்களிலேந்தப்பெற்றுப் பாலகயேசு பவனிவருகின்றுர். பாடகர்குழாம் திவ்வியயேசுவின்திருப்புகழைப்பாடக்கட்டளைக்குரவர் இராசநடையிலே யாவையும் கண்காணித்துச் சென்றுகொண்டிருந்தார். பகலவனும் தனதுகிரணங்களை மென்மையாகவே பரப்பிக்கொண்டிருந்தான். சுற்றுப்பிரகாரம் ஆலயத்துள்வந்ததும், 2-ம்பூசை பாட்டுப்பூசையாக நிறைவேறியது. பூசையின்போது "சிறுவர்களை நம்மிடம்வரவிடுங்கள்; ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது" என்ற சுவிசேஷவாக்கியத்தைப் பீடிகையாகக்கொண்டு சிறியோர்க்கு நன்மதிகள்கூறி, பெற்றோர்க்குப் பிள்ளைகள்மட்டில் உள்ள பாரமானகடமைகளை விளக்கிக்கூறிச் சிறந்த தோர்பிரசங்கம் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகளால் செய்யப்பட்டது. பெருந்திரளானபிள்ளைகளும், பெற்றோரும் திருவிருந்தருந்தினர். பூசைமுடிவில் கட்டளைக்குரவர் பிள்ளைகள்எல்லோரையும் ஆசீர்வதித்தபின் பாலகயேசுவின் திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பெற்றது. எல்லோரும் பாலகயேசுவின் ஆசியைப்பெற்று அகமகிழ்வுடன் சென்றனர்.

## அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள்சபை அதிசிரேஷ்டராகும்

### மகாவண. லேயோ டெசாற்றெல் சுவாமிகள்

யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்கு

### விஜயஞ்செய்கின்றுர்

**1959 மாசி 10-ந் திகதியிலிருந்து மாசி 13-ந் திகதிவரை**

அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையின் அதிசிரேஷ்டரான மகாவண. லேயோ டெசாற்றெல் சுவாமியவர்கள் சென்ற தைமாதம் 31-ந் திகதி சனிக்கிழமை இலங்கைக்கு வந்திருக்கின்றுர். நிகழும் மாசி மாதம் 8-ந் திகதி பூர்த்தியாகவிருக்கும் அதிமேற்றிராசன சற்பிரசாத சமாகமத்திலே அவர் கலந்துகொள்ளுவார்.

அதிசிரேஷ்ட சுவாமியவர்கள் 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை விமானமூலம் யாழ்ப்பாணம் வந்துசேருவார். அன்று பிற்பகல் 5 மணிக்கு ஆசனக்கோவில் மைதானத்திலே அவருக்கு ஓர் பொது வரவேற்பு அளிக்கப்படும். யாழ்ப்பாண மேற்றிராசனம் முழுவதினதும் சார்பாக அவருக்கு வரவேற்பு அளிக்கப்படும் சுபசந்தர்ப்பத்திலே கத்தோலிக்கமக்கள் திரளாகச் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப் படுகிறது. வரவேற்பின் பின் அதிசிரேஷ்டர் அவர்கள் ஆசனக் கோவிலிலே திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளுவார்.

12-ந் திகதி அவர் மருதமடுத் திருப்பதியையும், மன்னுரையும் தரிசிப்பார். 18-ந் திகதி இலங்கையிலிருந்து ரோமாபுரிக்குத் திரும்புவாரென எதிர்பார்க்கப் படுகிறது.

அதிசிரேஷ்ட சுவாமியவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் திருத்தொண்டாற்றி வருகின்ற சுமார் 8,000 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையின் தலைவராவர். இந்தக் குருபரித்தியாகிகள் சபையானது தேவனுடைய திருச்சபையிலே 8-வது மிகப்பெரிய சபையாயும், வேதபோதக நாடுகளில் திருத்தொண்டாற்றி வருகின்ற 5-வது மிகப்பெரிய சபையாயும் திகழ்கின்றது. இச்சபையார் "கஷ்டமான வேதபோதக களங்களின் நிபுணர்கள்" என்று 11-ம் பத்திநாதபாப்பானவரால் அழைக்கப்பெற்றவர்கள்.

அமலோற்பவ மரியநாயகி சபைக் குருபரித்தியாகிகள் இலங்கையில் 100 வருடங்களுக்கு மேல் சித்திகரமாகத் திருத்தொண்டாற்றியிருக்கிறுர்கள். இன்று கொழும்பு அதிமேற்றிராசனமும், யாழ்ப்பாண மேற்றிராசனமும் இந்தக் குருபரித்தியாகிகளாலே தொண்டாற்றப்பெற்று வருகின்றன. தம்முடைய மக்களையும், நம்முடைய திவ்விய கர்த்தருக்காக அவர்கள் தொண்டாற்றியிருக்கின்ற களத்தையும் கண்டுகொள்வதற்காக மகாவண. அதிசிரேஷ்ட சுவாமியவர்கள் யாழ்ப்பாணம் வருகின்றுர்.

வாழ்க பல்லாண்டு!

---

## திருமண உற்சவம்

அளவெட்டியைச்சேர்ந்தவரும், தற்போது பூநகரி அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிவருபவருமான திரு. த. அந்தோனிப்பிள்ளை அவர்களின் புதல்வரும், வேதபோதக காண்டங்கள் முதலாம கத்தோலிக்கபிரசுரங்களின் ஆசிரியரும், சிறந்தபேச்சாளருமாய் விளங்கியிருந்து காலஞ்சென்ற அதிவண. இப்பொலிற் சுவாமியவர்களது பேரனும், குருநகர் சென்ஜேம்ஸ் ஆண்பாடசாலை ஆசிரியர்களுள் ஒருவருமான திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை அவர்கட்கும், கல்லூரில் வதிபவரும், யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப சங்கத்தில் கடமையாற்றுபவருமான திரு. யோ. பேதுருப்பிள்ளை அவர்களின் புதல்வியும், துன்னுகுட்டிக் குடியிருப்புப் பாடசாலை ஆங்கில உதவி ஆசிரியையுமான திருநிறைசெல்வி மாசிலலா மரியரெத்தினம் அவர்களுக்கும் சென்ற மார்கழிமாதம் 27-ந் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்குப் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலிலே இனசனர்-சிநேகிதர், மற்றும் பெரியோர்களும் பெருந்திரளாகக் கூடிய சமுகத்திலே வண. கட்டளைக்குரவரவர்களால் மங்கல்யதாரண திருமணவைபவம் மங்கலகரமாக நிறைவேறியது. திவ்விய பூசையின்பின் புதிய தம்பதிகள் ஆசிரியர் சீ. இராசேந்திரம்அவர்களாலும், அவர் பாரியாராலும் புஷ்பாரஞ் சூட்டப்பெற்று மோட்டார்த ஊர்வலமாக அழகேமயமாய்விளங்கிய மணமகள் மன்றலமனை சேரவே, அங்கு மணமகளின் பெற்றோர் மலர்மாலை சூட்டித் தம்பதிகளை வரவேற்று நின்றுர்கள். அதன்மேல் அவண் சமுகமளித்தசகலரும் சம்பிரமமாக உபசரிக்கப்பெற்றுர்கள். அத்தருணம் புதிய தம்பதிகளை வாழ்த்திச் சோபனத் தந்திகளும், அன்பளிப்புகளும் ஏராளமாகவந்து குவிந்துகொண்டிருந்தன. ஆசிரியர் எஸ். ஜோசப்பிள்ளை அவர்கள் மணமகனின் குணநலன்களையிட்டும், ஆசிரியர்கள் சீ. இராசேந்திரம், பி. இராயப்பு ஆகியோர் மணமகளின் மாசற்ற சீரிய குணங்களையிட்டும் பேசி, புகழ்மாலை சூட்டிச் சோபனங்கூறி நின்றுர்கள். ஈற்றில் புதுமணத் தம்பதிகள் சார்பாக மணமகன் நன்றி தெரிவித்துநிற்க, சபையோர் நண்பகல்விருந்து அருந்திய மகிழ்ச்சியுடன் உற்சவம் இனிதே நிறைவாயது. இப்புதிய குடும்பமானது பதினுறும்பெற்றுப் பெருவாழ்வு வாழ இறைவன் திருவருள் பாலிப்பாராக!

# சமஷ்டியா? தனித்தமிழரசா?

திரு. சுந்தரலிங்கம் அவர்களின்

## உணர்ச்சிமிகுந்த விடைகள்

சுதந்திர தாகம்சுனைக்கும் — சுயேச்சையாட்சி காணத்துடிக்கும் தமிழர்களே! உங்கள் நசிந்தனைக்கு ஓர்வேண்டுதல்? சற்றுச்சிந்தித்துப்பாருங்கள்! நாம் இன்றைய இக்கட்டான நிலையில் — சுதந்திர புருஷர்களாக வாழவேண்டுமாயின், எத்தகைய வழியினைக் கையாளலாம்? என்னகொள்கையைக் கடைப்பிடிக்கலாம்? ஈழம் அன்னியர் தயவின்றி, உதவியின்றித் தனித்துவாழ முடியாதா? ஈழத்தில் நமக்குப்பரிபூரணசுதந்திரம் உண்டல்லவா? தமிழ் முழக்கம் முழங்கிவரும் தமிழர்களே! ஈழத் தமிழாட்சியமைக்க ஒன்றுகூடுவோம் வாரீர்! வாரீர்!!

"ஈழம் எங்கள் தெய்வம்"— "ஈழப்போர் எங்கள் தர்மம் — ஈழவெற்றி எங்கள் சுவாதீனம்" எனவே, தன்மானம்மிக்க தமிழ்ப்பெருங்குடி மக்களே! எங்கள்நாட்டில் எங்கள் ஆட்சியாம்—ஈழத் தமிழாட்சி அமைத்து ஏற்றமுற வாழுமவழிவகுக்க இதோ வாருங்கள் — சேருங்கள் — சேர்ந்து உழையுங்கள்." இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள "ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணி"யின் பிரசாரக் கூட்டம் சென்ற25-1-59ஞாயிறன்று யாழ்ப்பாண முற்றவெளிமைதானத்தில் நிகழ்ந்தபோது, வவுனியா பிரதிநிதி, திரு. சி. சுந்தரலிங்கம்அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. சுந்தரலிங்கம்அவர்கள் தொடர்ந்துபேசும்போது, அவசரகால அவலநிலையைப்பற்றி விளக்கி, பாராளுமன்றப் பிரதிநிதிகள் முதல், சபாநாயகர் (சபைமுதல்வர்)வரை பொலிசாரதும், இராணுவத்தினரதும் உதவியுடன் பாராளுமன்றக் கூட்டங்களுக்குச் செல்லவும், பின்னர் வீடுதிரும்பவும் வேண்டியிருந்த அல்லோல கல்லோல நிலையைமக்களுக்கு ஞாபகமூட்டி, இந்தநிலைமை யாரால் வருவிக்கப்பட்டது? இந்தநாட்டில் மக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்படுகின்றதா? பறிக்கப்படுகின்றதா? அச்சமின்றி உலாவ முடிகின்றதா? சனநாயகஅரசாங்கத்தில் மக்களுக்கிருக்கும் சௌகரியம் இவைதானோ?என்றும் வினவினார்.

### நாங்கள் அதிகம் தூரத்திலில்லை!

இன்றையநிலையில்—நாம் தமிழாட்சியமைத்து தன்மானத்தோடு வாழ்வதே தவிர வேறுவழியில்லை—திரு. செல்வநாயகம்அவர்கள் கட்சிக்கும்—எனது கட்சிக்கும் அடிப்படைக் கொள்கையில் வேறுபாடெதுவுமில்லை. அவர்கள் கொஞ்சம் பார்த்துச் செய்வோம் என்கிறார்கள்—ஆனால், நான் — இல்லை—இப்போதே பார்ப்போம் என்கிறேன்—ஆகவே, சமஷ்டிக்கட்சியாருக்கும் எங்களுக்கும் அதிகதூரமில்லை—நாங்கள் மிகமிகக் கிட்டக்கிட்டவே நிற்கிறோம்; திரு. செல்வநாயகம் அவர்களே தமிழினத்தின் தலைவர் என்று குறிப்பிடவிரும்புகின்றேன், என்று கூறிவிட்டு, சென்றவகுப்புக் கலவரத்தின்போது பொலிசாரது உதவியுடன் தமிழர்க்கு ஏற்பட்ட இன்னல்களையும், தாரழிப்பு இயக்கத்துக்குப் பின்னணியிலின்று உதவிகொடுத்த செயல்களையும் விவரித்தார்.

தமிழருக்குச்சமஉரிமைவழங்குவோம் எனக்கூறும் எந்தச்சிங்களக் கட்சியையும் இனித்தமிழர்கள் நம்பமுடியாதென்றும், இங்கேமதவாச்சிக்கு இங்காலே மொழிச்சமத்துவம்பேசும் சிங்களக் கட்சிகளில் தமிழர்கள் எச்சரிக்கையாக இருக்கும்படியும்கூறிய திரு. சுந்தரலிங்கம்தான் ஒருபோது எதிர்க்கட்சித் தலைவர் திரு. என். எம். பெரேராவைச்சந்தித்து, உங்கள் சமசமாசக் கட்சி ஆட்சிக்குவந்தால்—தனிச்சிங்களம் மாத்திரம் என்னும் சட்டத்தைத் திருத்துவீர்களோஎனக் கேட்டதாகவும் அதற்கு அவர் தாங்கள் தமிழையும் சேர்ப்போம் என்று கூறியதாகவும் சிங்களம் மாத்திரம் என்பதை என்ன செய்வீர் என்றபோது ம்! ம்! என்று சிறிதுநேரம் ஏதோ......என்றாரென்றும், எனவே தமிழர்கள் தன்கையே தனக்கு உதவியென இருக்கவேண்டுமென்றும் கூறினர்.

கடந்தகாலத்தில் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து உழைத்தது பெருந்தவறு என்பதை உணர்கிறேன் — அக்குற்றத்துக்காக உங்கள்பால் மன்னிப்புக்கேட்கிறேன்—அக்குற்றத்துக்காகத் தமிழ்ப்போரில் உயிரையும் தியாகம்பண்ணச் சித்தமுடையவனாகவுள்ளேன்என்றார் திரு. சுந்தரலிங்கம். மேலும் அவர் பேசும்போது, "அன்று ஐம்பதுக்கு ஐம்பது கேட்டார்கள் — இன்றோ157-க்கு 16 தான்கிடைக்கப்போகிறது. இந்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும்? இந்த நிலைமைமாறவேண்டும் என்று கூறியஅவர், தமிழ்ஆட்சி வேண்டுமோ சமஷ்டிஆட்சி வேண்டுமா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டுமென்றும், தமதுகேள்வியை நிலைநாட்ட ஒரு இடைத்தேர்தலை நடத்துவதற்கு தாம்தயங்கவில்லையென்றும், எந்தத் தொகுதியிலேனும், தமதுகேள்வியை முன்வைத்து,போட்டியிட்டுச்சமஷ்டிக் கட்சியாரது கேள்வியைத் தமிழ்மக்கள் விரும்பினால் அவர்களுடன் சேர்ந்துழைப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேடையைநோக்கி இளம்வாலிபர்களும், முதியவர்களும் கூடினார்கள். திரு. சுந்தரலிங்கத்தாரிடம் கேள்விகள் கேட்டார்கள். புன்முறுவலுடன் கேள்விகட்கு விடைகொடுத்தார்கள்.

குரல் ஒன்று! ஐயா! உங்கள் ஈழாராச்சியம் வந்தால், சிறுபான்மையருள் சிறுபான்மையாக, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்து இன்று அல்லற்படும் தமிழ்மக்கள்கதி என்னாகும்?

பதில்: அன்பா! காலம்மாறுகிறது—மக்களும் மாறித்தான் ஆகவேண்டும்;

குரல்இரண்டு; ஐயா, ஈழத்தலைவரே! உங்கள் தனிநாட்டுக்குப் பொருளாதாரம் பொலியுமா?

பதில்: அன்புமிக்க தோழரே! வவுனியாபோன்ற பிரதேசங்களில் விளையும் நெல், ஒருவருடத்து வரும்படி—'மூன்றுவருடத்துக்குப்போதும். கைத்தொழில்கள் — கமத்தொழில்கள் செழிக்கச்செய்யவேண்டும். நீருயா... நெல்லுயர...... நெல்லுயரா...... வரப்புயர......கோனுயராஎன்பதை அறியீரோ?

குரல்மூன்று; நீங்களும், சிலதமிழரும் முன்பு சிங்களருடன் ஒத்துழைத்தத்தாலே எம்நிலைமை இப்படி இன்று வந்தது? இல்லையேல்!

பதில்: ஆம், உண்மை. அதற்குமன்னிப்புக் கேட்கிறேன் உங்கள்மத்தியில்.

—"நாதன்"

---

● உலகின் எந்தக்கோணத்துக்கும் பறக்குங் குண்டுகளின் உதவியைக் கொண்டு துரிதமாகத் தபால்களை அனுப்பிவைக்க ஐக்கிய அமெரிக்க தேசம் வழிபண்ணுமென்று அமெரிக்க போஸ்றமாஸ்றர் ஜெனறல் திரு. ஆர்தர் சமர் பீல்ட் சென்ற 24-ந் திகதியன்று வாஷிங்ரன்நகரிலே அறிவித்திருக்கின்றார்.

● இத்தாலிய பாராளுமன்றத்திலே முன்னர் கிறீஸ்துவ ஜனநாயக கட்சி எம். பி. ஆகஇருந்தவரான திரு. யோசெவ் டொசெற்றிஅவர்கள் சமீபத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் ஐந்துவருடங்களாக மொடெனு சர்வகலாசாலையிலே கனன் சட்டசாஸ்திர போசிரியராய் இருந்துவந்தார்.

---

கலைச்சோலையில் புதுமலர்கள்

பாலர்க்கு விருந்தூட்டும்

# பைந்தமிழ் நூல்கள்



| தமிழ்ப் பயிற்சி | தமிழ்ப் பயிற்சி |
|---|---|
| (2ஆம் வகுப்பு) | (3ஆம் வகுப்பு) |
| விலை சதம் 65 | விலை சதம் 90 |

அழகுப்பதிப்புக்கள்! அறிவுத்தொகுப்புக்கள்!!

● இனிமைபொதிந்த இலக்கணப் பயிற்சிகள்.
● இளஞ்சிறாரை ஈர்க்கும் புதுமைகள்.
● இன்சுவைகனிந்த கவிதைகள்; கதைகள்.

(கவிதைகள்; பாலர்களுக்கென இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டவை)

படங்கள்; விடுகவிகள்; பயிற்சிவிளையாட்டுக்கள் நிறைந்தவை.
பத்திரிகைகளும், பாடசாலைகளும் பாராட்டுகின்றன.

ஆசிரியர்கள்:

க. பே. முத்தையா — ம. விக்ரர்
(தமிழறிவு, கட்டுரைக்கதிர், குழற் பயிற்சிகள் எழுதியோர்)

விற்பனையுரிமை:

புனித சூசைமாமுனிவர் புத்தகசாலை,
பெரியதெரு, — யாழ்ப்பாணம்.

வியாபாரிகளுக்கும், தொகையாக எடுப்போர்க்கும் விசேடகழிவு

---

● தரையிலுள்ள இராணுவஇலக்குகளை உளவுபார்க்கக்கூடிய செயற்கைக்கிரகம்ஒன்றை அடுத்தவருடம் பரீட்சார்த்தமாக வானவெளிக்கு அனுப்பிவைக்க ஐக்கியஅமெரிக்கதேசம் திட்டமிட்டிருப்பதாக "நியூயோக் ரைம்ஸ்" பத்திரிகை சென்ற29-ந்திகதி செய்திவெளியிட்டிருக்கிறது.

● நமதுஆசிர்வாதம் வேண்டுமானால் நீங்கள்முதலாவதாகத் திரிகாலச்செபம் சொல்லவேண்டுமென அன்று ஞாயிற்றுக்கிழமை அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய மைதானத்தில் குழுமியிருந்த இரண்டாயிரம் யாத்திரிகர்களுக்குப் பரிசுத்தபாப்பாசர் கூறினார். யாத்திரிகர்கள் அந்தச்செபத்தைச் சொன்னார்கள். அதன்மேல் பாப்பாசர் அவர்களை ஆசீர்வதித்தார்.

* * *

### விஞ்ஞானிகளுக்கு வேண்டுகோள்

மனிதனை மனிதன் கைப்பற்றுவதற்குப் பாடுபடாமல் மனிதவர்க்கத்தின் ஈடேற்றத்துக்காகச் செயலாற்ற வேண்டுமென்று புதுடில்லியில் நடைபெற்ற இந்திய தேசிய விஞ்ஞான நிலையத்தின் வருடாந்தவிழாவிலே பிரதமர்நேரு விஞ்ஞானிகளைக் கேட்டுக்கொண்டார். அவ்விழாவிலே அவர் பேசியது வருமாறு: சந்திரனைப் பிடித்துவிட்டால் மாத்திரம் போதாது. பீதியையும், பகையையும் ஒழிக்கவே விஞ்ஞானிகள் விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும். நல்ல பிரசைகளை உருவாக்க விஞ்ஞானிகள் பாடுபட வேண்டும். நாசகார ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்தான் விஞ்ஞானிகள் தீவிரகவனம் செலுத்துகிறார்கள். இதனால் மனிதவர்க்கத்துக்கு எந்தவிதமான நன்மையும் கிடையாது.

● பாப்பாசர் தமது ஞானஆளுகையின் முதலாவதுவருட ஞாபகார்த்த பதக்கத்தை லூர்துபதி நூற்றாண்டு விழாவை ஞாபகப்படுத்துவதொன்றாகத் தெரிவுசெய்திருக்கின்றார். அதன் ஓர்பக்கத்தில் அமலோற்பவநாயகியின் உருவமும், மறுபக்கத்தில் பாப்பாசரின் பாதிமுகமும் பதிக்கப்பட்டிருக்கும். இந்தப்பதக்கம் சம்பேதுரு, சம்பாவிலு அப்போஸ்தலர்களின் திருநாளுக்கு முதனாளாகிய வருகிறஆனிமாதம் 28-ந் திகதி அவருக்குவழங்கப்படும்.

● அல்ஜீரியாவிலே சமாதானம்ஏற்படும்படியாக லூர்துபதிக்குநடைபெற்ற ஓர்திருயாத்திரையில் வடஆபிரிக்காவைச்சேர்ந்த முஸ்லீம்களும் கலந்துகொண்டார்கள். திருக்கெபியில் நிறைவேறியபூசையிலே அல்ஜீரிய பேர்பர் சாதியினரின் கபிலேபாஷையில் சுவிசேஷம் வாசிக்கப்பட்டபோது, அராபியகீதங்கள் படிக்கப்பட்டன. இந்த யாத்திரிகர்கள் அராபிய பாஷையில் 'மரியாயே வாழ்க'என்று பொறிக்கப்பட்டிருந்த ஓர்கொடியை எடுத்துச் சென்றார்கள்.

● இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ள கத்தோலிக்கரின்தொகை "கதலிக் டிறெக்ரறி"யிலே சென்றமாதம் 15-ந்திகதி வியாழக்கிழமை அதிகாரபூர்வமாகப் பிரசுரமாகியிருக்கிறது. அதன்படி இருநாடுகளிலுமுள்ள கத்தோலிக்கரின்தொகை 34,22,500பேர். இத்தொகை சென்றவருடத்திலே அங்கு 79,500 பேரால் அதிகரித்திருக்கின்றது. சென்றவருடத்திலே அங்கு 14,581பேர் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருக்கிறார்கள்.



# புனிதவீரர் பக்கம்



*அருமைச் சகோதரங்களே!*

மேதாவிகள், கவிவாணர், நிபுணர் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்திருக்கிறீர்கள். புனிதர்களின் சரித்திரங்களையும் அறிவீர்கள்.

இவர்கள் எல்லோரிடமும் நாம்காணும் அடிப்படையான ஒரு விசேஷம் உண்டு. அதைப்பற்றி யோசித்தீர்களா? அதுதான் விடா முயற்சி.

பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து விட்டனவாகையால், இத்தகைய பண்பை வளர்க்க மாணவருக்குச் சந்தர்ப்பம் உண்டு. முதிர் வயதில் நீங்கள் எப்படி விளங்குவீர்கள் என அறிவதற்கு இந்தக் கலாசாலை ஆண்டில் உங்களைக் கவனித்துப் பாருங்கள்.

செய்யவேண்டிய முயற்சிகளைத் தொடர்ந்து செய்யுங்கள். பள்ளி நேரத்தில் எவ்வளவைப் படிப்பிற் செலுத்துகிறீர்கள் என்று மாத்திரமல்ல, வீட்டிற் படிக்கவேண்டியநேரத்தில் எவ்வளவைச் சோம்பலிற் செலவழிக்கிறீர்கள் எனவும் கவனியுங்கள்.

அம்மட்டோடு நின்றுவிடவேண்டாம்; உங்கள் விசாரணைப் பங்குடன் சார்ந்த முயற்சிகளில் நீங்கள் பங்கெடுக்கிறீர்களா? அம்மா அல்லது ஆசிரியர் ஏவாமல் பாவசங்கீர்த்தனம், நன்மை பெறுகிறீர்களா? வீட்டில் உள்ள வேலைகளில் காட்டும் சுறுசுறுப்பென்ன?

கையிடுங் கருமங்களில் கதிகாணும் கருத்துடன் முயற்சிசெய்து நற்பண்புகளை வளரச்செய்வதற்கு உங்கள் குமரப் பருவமே சிறந்தது. குறிப்பான ஒருபாடத்தில் கெட்டித்தனமல்ல, செலுத்தும் ஊக்கமே பலன் அளிக்கும். "இளமையிற்கல்வி சிலை எழுத்து." பண்பும் அப்படியே.

அண்ணா.

—※—

## "என்னைப் பின்செல்ல விரும்புகிறவன் தனது நாளாந்த சிலுவையைச் சுமந்துகொண்டு என்பின்னே வரக்கடவான்"

இவ்வாக்கியத்தை எமதுகர்த்தர் யேசு திருவாய் மலர்ந்தருளினர். முதன்முதல் சிலுவைஎன்றால் என்ன என்பதை ஆராய்வோம். சிலர் ஆண்டவர் மரத்தால் ஆக்கப்பட்ட சிலுவையைச் சுமக்கும்படி சொன்னாரென்று நினைக்கக்கூடும். அது மிகவும்பிழையான அபிப்பிராயம். உண்மையாகவே மரத்தாலாக்கப்பெற்ற சிலுவையைப்பற்றி யேசுபெருமான் கூறவில்லை. அப்படியானால் எதைப் பற்றிக் கூறினாரென்று கேட்கக் கூடும். அதற்கு மறுமொழி இருக்கிறது. நீங்கள் சிலுவையைக் கண்டிருக்கிறீர்கள். அதன் வடிவத்தையும் கவனித்திருப்பீர்கள். அது ஓர் நேர்த்தடியையும், ஓர் குறுக்குத்தடியையும் கொண்டது. இருதடிகளுமின்றிச் சிலுவையாகாது. இச்சிலுவையிலுள்ள இருதடிகளிலும் நேர்த்தடியை ஆண்டவர் மனிதனுக்கு இயல்பாகஉள்ள உலக நாட்டத்திற்கு ஒப்பிடுகிறார். மற்றையது அதாவது, குறுக்குத்தடியைக் கடவுளின் சித்தத்திற்கு ஒப்பிடுகிறார். ஆகவே, சிலுவை எப்படி உண்டாகிறது என்றால் நாம் உலக இன்பசுக போகங்களுக்குக் குறுக்கேபோய் இறைவனின் சித்தத்தை நிறைவேற்றும் பொழுதே உண்டாகின்றது. இதை எமது மனிதசக்தியினால் செய்யமுடியாது.

தேவன் தமது உயிரைப் பரமபிதாவுக்குப்பலியாக்கி எமக்குஇரட்சணியத்தையும்,விலைமதிக்கப்பெறாத அளவில்லாத பேறுபலன்களையும் அடைந்து தந்திருக்கிறார், ஆனதினால், அவரைப் பின்பற்றுவதற்கு அவருடையபலியில் பங்குபற்ற வேண்டும்.

நாம்இப்பலியை ஒவ்வொருநாளும் செய்கிறோம். அப்பலியை யேசுநாதரும், நாமுமே ஒப்புக்கொடுக்கிறோம். ஏன் நாமும்என்று சொல்லுகிறோம். தேவன் திருச்சபையின் தலையாயிருக்கிறார், ஆகையினால் அவர் செய்யும் பலியில் எல்லோருக்குமே பங்குண்டு. பூசைவேளையில் யேசுநாதர் கல்வாரி மேட்டில் ஒப்புக்கொடுத்த அதேபலியைத் திரும்பவும் யேசுநாதர் அனுதினமும் அதையும், இரத்தம்சிந்தாத விதமாய்த் திருச்சபையையும், சேர்த்துப் பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். அவ்வேளை இறைவன் கல்வாரி மேட்டில் அடைந்த பேறுபேறுகள் எங்கள்மேல் பொழியப்படுகின்றது. நாம் அப்பேறுபலன்களை எம்மில் நிலைநாட்டி ஓர்சிறிய நற்கிரிகையைச் செய்தாலும் அதற்குப் பன்மடங்கு வெகுமதி பரலோகத்தில்கிடைக்கும். ஏனெனில், இவ்வுலகில் தாகத்திற்கு ஒருவனுக்கென்கிலும் ஒரு டம்ளர் தண்ணீர் கொடுப்பவனுக்குப் பரலோகத்தில் பெரும்பாக்கியம்கிடைக்கிறதாம். சாதாரண மனிதருக்கு இறைவன் இதைச்சொன்னார். குருமார், சந்நியாசிகள், கன்னியாஸ்திரிமார் முதலானோர் இறைவனுடன் அன்னியோன்னியமாய்ச் சீவிக்கிறவர்கள். ஆனதினால், இவர்களை இறைவனுடையவர்கள் என்று சொல்லுகிறோம். ஏனெனில், அவர்கள் எல்லா இன்பங்களையும் வெறுத்து இறைவனுக்குத் தம்மைமுற்றுகக் கையளித்தவர்கள். ஆனதினால், அர்ச். சின்னப்பர் கூறுவதாவது: "கடவுளுடையவர்கள் எனப்பட்டவர்கள் தமது நாளாந்தசிலுவையை அதாவது, கஸ்தி, துன்பதுரிதங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்வதோடு தம்மையே சிலுவையோடு சேர்த்து அறையவேண்டும்" என்கிறார். ஆம், ஆண்டவர் ஆணி மூன்றில்தொங்கியதுபோல் எல்லோரும் "கற்பு, தரித்திரம், அமைச்சல்" என்னும்மூன்றுஆணிகளில் தொங்க வேண்டும் என்றுகூறுகின்றார்.

— B. P. ஜெயம்

## உமது இரத்தத்தை நாய்கள் நக்கும்

— ஜீ. ஜே. பிள்ளை —

1533-ம் ஆண்டு வைகாசிமாதம் எட்டாவது என்றி தனது இடைக்கால வாசஸ்தலமான (கிறீனிச்சின்) மாளிகையில் தங்கியிருந்தான். பாப்பானவரால் "விசுவாசபாதுகாவலன்" என வருணிக்கப்பட்ட அதே என்றியாக அவன் இப்போது இருக்கவில்லை. தன் சிம்மாசனத்துக்குச் சந்ததி வேண்டும் என்று, அவன் ஆன்பொலின் என்பவளை, திருச்சபையின் ஒழுங்கிற்கு மாறாக, முன்மனைவி இருக்கவும், மணந்திருந்தான். கத்தரீன் என்ற தனது முதல்மனைவியோடு, திருச்சபைத் தலைவரின் கருத்தையும் எதிர்பாராது விவாகரத்துக் கோரும் அளவுக்கு அவனது மனோநிலை மாறிப்போயிருந்தது.

ஆனால் இந்த நிலையிலும், என்றி பரிசுத்த பூசைப்பலியின் மட்டில் பற்றுடையவனாய், ஞாயிறுதோறும் பூசைகண்டு வந்தான்.

அன்றும் ஒரு ஞாயிற்றுக்கிழமை. எட்டாவது என்றி வழமைபோல மடத்துச் சிற்றாலயத்திலே தனது வழமையான இடத்தில் அமர்ந்திருந்தான். அன்று பூசை சொல்லிய குருவானவர் அம்மடத்துச் சந்நியாசிகளில் ஒருவர். பீற்றோ என்பது அவர் பெயர். அவர் அன்று பிசரங்கத்துக்காக எடுத்துக் கொண்ட விஷயம், "ஆகாப்பும்" தீர்க்கதரிசி மிக்கேயாவும்" என்பதாகும். அவர் அன்று வேண்டுமென்றே அந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. அச்செயல் எதிர்பாராதது. ஆனால், தெய்வாதீனமாக நடைபெற்றது போலவும் தோன்றியது.

பீற்றோ குருவானவர் தமது பிரசங்கத்தை ஆற்றொழுக்குப்போன்ற அழகிய நடையில் ஆற்றிக் கொண்டு போனார். அவரது கருத்துச்செறிந்த வாசகங்கள் அங்கு குழுமி இருந்தோர் இருதயங்களைத் தொட்டன. பீற்றோ ஒருவாசாலகப் பிரசங்கி என்பது மட்டுமல்ல, ஆழ்ந்த பக்திமான். தவவாழ்வினர். தளராத விசுவாசம் பூண்டவர். கிறீஸ்துவின் வார்த்தைகள் உரிய காலத்தில், உரிய நிலத்தில் விழவேண்டும் என்னும் பேரவாவும், நன்நோக்குமுடையவர்.

பிரசங்கியார், விஷயத்தின் பிரதான பாகத்துக்கு வந்தார். பிரசங்கக் கூட்டில் நின்றவராய், அரசன் என்றி வீற்றிருந்த பக்கமாகத் திரும்பினார். கீழே குனிந்து அரசனை நோக்கினார்.

"நான்தான் அந்த மிக்கேயா. நீர் என்னை வெறுக்கலாம்; எனினும் நான் சொல்லியே ஆகவேண்டும். அதாவது: நீர் ஆன்பொலினோடு கொண்டுள்ள தொடர்பு, இரகசிய மணம் சட்டவிரோதமானது. திருச்சபையின் போதகத்துக்கும், யேசுநாதரின் கருத்துக்கும் முற்றிலும் முரணானது."

பீற்றோவின் இந்த வார்த்தைகள் இடிமுழக்கம்போன்று அச்சிற்றாலயத்தின் சுவர்களில் மோதி எதிரொலித்தன.

எளிய சந்நியாசி, தரித்திர அவதாரமான குருவானவர் ஒருவர், இங்கிலாந்தின் பேரரசன் எட்டாவது என்றியை, இவ்வளவு துணிகரமாக, பகிரங்கமாகக் கண்டித்துப்பேச எவ்வாறு முடிந்தது என அங்கு குழுமியிருந்தோர் ஆச்சரியமுற்றனர்.

ஆனால், அரசனோ! அவன் சிறிதும் மனச்சலனமற்றவனாய்த் தனது ஆசனத்தில் அசையாது அமைதியாக இருந்தான்.

குருவானவர் தொடர்ந்து கூறினார்: "இம்சையும், மரணமும் என்னை எதிர்நோக்கியுள்ளன என்பதை நான் நன்கு அறிவேன். எனினும், என் வாய்மொழியாக இறைவன் உமக்குக் கூற விரும்பும் வார்த்தைகள் இவை. இவற்றை நான் சொல்லியே தீரவேண்டும். ஆன்பொலினோடுள்ள உமது உறவை விட்டுவிடவேண்டும். அன்றேல், ஆகாப் என்பவனுக்கு நேர்ந்த கதியே உம்மையும் காத்திருக்கின்றது. உமது இரத்தத்தை நாய்கள் நக்கும்."

இவ்வாசகங்களுக்கும் அரசன் அசையவில்லை. அமைதி குடிகொண்டவனாய் இருந்தான்.

மாட்டீன்லூத்தர் என்பவனுடைய பதிதமதக் கொள்கைகளைக் கண்டித்தமைக்காகப் பாப்பரசரே தனக்கு "விசுவாச பாதுகாவலன்" எனும் மகிமை விருது அளித்திருப்பதை அரசன் எண்ணிப்பார்த்தான். இந்நிலையில் அந்த ஏழைக்குருவானவரின் தீர்க்கதரிசனம் அரசனுக்குச் சிரிப்பை உண்டாக்கியது.

ஆன்பொலினோடு தான் கொண்டுள்ள உறவு நியாயமானது தான் என்பதை ரோமைநகரம் உணரும் காலம் கட்டாயம் வரும் என்றும், அப்போது திருச்சபை தனது செயலை அங்கீகரித்து ஆசீர்வதிக்கப் போகிறது என்றும், அவன் பலமாக எண்ணமிட்டான்.

அடுத்த ஞாயிறு வந்தது. அன்றும் அரசன் எட்டாவது என்றி தனது முன்னைய வழமையான இடத்தில் அமர்ந்திருந்தான். ஆனால், இம்முறை வேறொரு விசேஷம் காத்திருந்தது. பீற்றோ இன்று பிரசங்கியாராக இல்லை. அவரிடமாகக் கார்வின் என்ற ஒருவர் பிரசங்கக் கூண்டில் ஏறினார். யாது செய்ய வேண்டும் என்று அவர் ஏற்கனவே அரச கட்டளையைப் பெற்றிருந்தார். எட்டாவது என்றியின் மதத்துரோகச் செயலை ஆதரித்த பல குருமார், சந்நியாசிகளுள் அவரும் ஒருவர்.

கார்வின் என்ற அவர், கடந்த ஞாயிறன்று பிரசங்கம் செய்த குருவானவர் பீற்றோ என்பவரைப் பலவாறாகத் தாக்கி வசைமாரி பொழிந்தார். சற்றில் கார்வின் கோவிலின் நாலாபக்கமும் தனது பார்வையைச் செலுத்தினார். அந்தப்பார்வை, பீற்றோவைத் தேடுவது போலவும், தன்னோடு எதிர்வாதமிட அழைப்பது போலவும் தோன்றியது. அவர் மிக ஆத்திரமடைந்தவராய், தனது உயர்ந்த குரலில் கூறினார்: "நான் உமக்குத்தான் கூறுகின்றேன் பீற்றோ! கேளும்!! உம்மையே நீர் மிக்கேயா தீர்க்கதரிசியாக எண்ணிவிட்டீர். அரசனுடைய செயலைக் கண்டிக்கத் துணிகிற அளவுக்கு நீர் தீர்க்கதரிசி ஆகிவிட்டீர். உமது வாதம் பொருத்தமற்றது."

இவ்வாறு கூறிய அவர் கம்பீரத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தார். தன்னோடு எதிர்வாதமிடப் பீற்றோ துணியவில்லை என்பதை அங்கு குழுமியிருந்தோர் நன்கு விளங்க வேண்டும் என்பது அவர் அவா. அவர் தொடர்ந்து கூறினார்: "ஐயோ! பீற்றோவை இங்கே காணா

வில்லை, பயந்து எங்கோ ஒழிந்து கொண்டார். என்னோடு எதிர்வாத மிட அவர் எம்மாத்திரம்."

தான் எதிர்பார்த்தது அன்று நடந்துவிட்டதாகக் கார்வின் உவகை பூத்தார். எட்டாவது என்றி மன்னனுடைய செய்கை சரியானதெனத் தான் நிறுவிவிட்டதோடு, அரசனது பேரபிமானத்தையும் சம்பாதித்துக் கொண்டதாக அவருளம் கூறிற்று.

(தொடரும்)

## லூர்துபதிக் காட்சிகளும் பேர்னதேத் அம்மாளும்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

இதுவரைக்கும் நான் அவற்றை வெளிப்படுத்தாது பிரமாணிக்கமாக இருந்துவந்திருக்கிறேன்.

இதுவேசுவாமி நான் கண்ட காட்சியின் வரலாறு. அது உமக்குப் பிரீதியைக் கொடுப்பதாக. நீர்அனுப்பிய பிரதிமைப் படத்துக்காக உமக்கு நன்றி கூறுகின்றேன். அதனைக் கவனமாகப் பேணிவருவேன். எனது அருமைத்தாயாரும் தனது சுகசேமத்தை உமக்கு அறிவிக்கும்படியும், தமதுபணிவான வந்தனோபசாரங்களை ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளுகின்றார். யேசுநாதசுவாமியுடையவும், தேவமாதாவுடையவும் இருதயங்களுடன் இணைந்து, உமதுபத்திவேகரமுள்ள பரிசுத்தசெபங்களில் எங்களையும் நினைவுகூரும்படி பிரார்த்திக்கின்றோம்.

பேர்னதேத் சுபிறு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. G. 132**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

வண்ணார்பண்ணை கிழக்கு
செல்லையா சண்முகம்
கைம்பெண் சிவக்கொழுந்து
— வழக்காளி.

எதிராக

தங்கள் பராமரிப்புக்காரன்
(Guardian-ad-litem)

தாவடி, செல்லையாசபாரெத்தினம் மூலமாக வெளிப்படும் மைனர்கள் (Minors)

வண்ணார்பண்ணை கிழக்கு

1. சண்முகம் சரோஜா ருணி
2. சண்முகம் ஜெய ருஜலிங்கம்
3. சண்முகம் ஜெகதாம்பாள்
4. சண்முகம் சற்குணலிங்கம்

பராமரிப்புக்காரன், தாவடி

5. செல்லையா சபாரெத்தினம்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் G. 132-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருகாண்டுக்காணியை 1959-ம்ஆண்டு பங்குனிமாதம் 10-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் கீவுப்பகுதி அல்லைப்பிட்டிக் கோயிற்பற்று, மண்டைதீவுஇறை "வடக்குவேரம்." பா. நில. இலா. ஐந்தம், (ப. கி. இ. 5) கிணறும், செய்பயிரும். எல்லை : கிழக்கு — ரோட்டு. வடக்கு — பொன்னம்பலம் பெண் அன்னத்தையுடைய ஆதனம். மேற்கு — சின்னத்தம்பி சபாபதிக்கும், சகோதரருக்கும், சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளைக்கும் உரிய ஆதனம். தெற்கு — சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையுடைய ஆதனமும், ரோட்டும். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

தி. ந. ஆசிர்வாதம்,
கொம்மிஷனர்.

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
28-1-59

## பருத்தித்துறை-தும்பளை பரி. லூர்துமாதா திருநாள்

இம்முறை மாசிமாதம் 11-ந் திகதியில் விபூதித்திருநாள் வருவதால், சுற்றுப் பிரகாரம் 11-ந் திகதி சாயந்தரம் 6-30மணிக்கும், அடுத்தநாள் திருநாட்பூசையும் வைக்கப்படும்.

கட்டளைக்குரவர்.

## தோப்பில், பரிசுத்த சதாசகாயமாதாவின் நோவினை விழா

தோப்பு, அர்ச். பிலிப்புநேரியார் தேவாலயத்தில் அடுத்துவரும் மாசிமாதம் 25-ந்திகதி புதன்கிழமை பரிசுத்த சதா சகாயமாதாவின் நோவினைவிழா அதிவிமரிசையாகக் கொண்டாடப்படும். இதில் சகலரும்பங்குபற்றி மாதாவின் சகாயத்தைப் பெறுங்கள்.

**திவ்விய பூசைகள் :**

செபப் பூசைகள் — காலை 5-30 மணி
6-30 மணி
பாடற்பூசை — காலை 7 மணிக்கு
பிற்பகல் 5மணிக்குச் சுற்றுப்பிரகாரம்
" " 6மணிக்கு நோவினை
" " 7-30மணிக்குச் சற்பிரசாத ஆசீர்வாதம்.

கட்டளைக்குரவர்
தோப்பு மிசாம்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the Intestate estate of the late Savirimuttu Leonard of 33, Beach Rd., Jaffna.
Deceased.

Testamentary Jurisdiction. } No. 563

Mary Seyammah widow of Saverimuttu Leonard of 33, Beach Road, Jaffna presently of Sillalai.
Petitioner.

Vs.

Min. 1. Anthoniapillai daughter of Leonard
,, 2. Mariyammah daughter of Leonard
,, 3. Mary Rosalin daughter of Leonard all of 33, Beach Road, Jaffna presently of Sillalai.
4. Soosaipillai Savirimuttu of Beach Road, Jaffna.
Respondents.

This matter coming on for disposal before P. Sri Skanda Rajah Esquire, District Judge, Jaffna on the 12th day of January 1959 in the presence of Mr. J. Patrick, Proctor on the part of the Petitioner and the affidavit and petition of the Petitioner having been read.

It is ordered that the abovenamed 4th Respondent be appointed guardian-ad-litem over the minors the abovenamed 1st to 3rd Respondents for the purpose of watching their interests in the Testamentary Proceedings and the Petitioner be and she is hereby declared entitled to have Letters of Administration to the estate of the abovenamed deceased as widow unless the Respondents or any other persons interested shall on or before the 20th day of February, 1959 show sufficient cause to the satisfaction of this Court to the contrary. The aforesaid minors to be produced in Court on the said date.

This 12th day of January, 1959,
**Sgd. P. Sri Skanda Rajah,**
District Judge.

Drawn by,
Sgd. J. PATRICK,
Proctor for Petitioner.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதயஆண்டவரினதும், பரிசுத்த சதாசகாயமாதா, (பரி. பாத்திமாமாதா), (பரி. அடைக்கலமாதா), (பரி. லூர்துமாதா), அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் மற்றும் சகல அர்ச்சியசிட்டர்களின் அனுக்கிரகத்தினுல் நான்வேண்டியது கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். இவர்களின்நாமம் என்றும் என்றென்றும் புகழப்படுவதாக.

எ. பாக்கியநாதன்
சுளிபுரம்

* * *

எனது அருமைத்தாயாகிய பரிசுத்த சதாசகாயமாதாவின் பேரருளால், எனக்கு ஏற்பட்ட வருத்தம் என்னைவிட்டு நீங்கியது. அவளின் மகிமைக்காக இதைப் பிரசுரிக்கிறேன்.

க. வஸ்தியாம்பிள்ளை.





### நோய்களின் விபரம்

கிரீழிவு, சன்னி, தொய்வு, இஸ்தேறியாவாய்வு, காசம், குன்மம், தாயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், தெற்பச்சிதைவினால் ஏற்படும்ரோகங்கள் முதலியவைகளுக்குச் சிகிச்சைபெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

**உங்கள் சுகவாழ்வே எமது சேவையின் இலட்சியம்.**


புத்தக மதிப்புரை

## மாணவர் சரித்திரக் காட்சி

### (இலங்கையும் உலகமும்)

**எட்டாம்வகுப்புக் குரியது**

ஆக்கியோன் :
**வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை,**
புனித என்றியரசர்கல்லூரி, இளவாலை,
பதிப்பகம் : ஸ்ரீலங்கா அச்சகம்,
யாழ்ப்பாணம்.
விலை பிரதிசதம் : 3-00

அரசினரதும், வடஇலங்கை ஆசிரியர்சங்கத்தினதும் 8-ம்வகுப்புக்குரிய பாடத்திட்டங்களைத்தழுவி எழுதப்பெற்றுள்ள "மாணவர்சரித்திரக்காட்சி" யென்ற இச்சரித்திரநூல் தொன்மை தொட்டுக் கி. பி. 1500வரையுமுள்ள நீடியபலநூற்றாண்டுகளின் காலத்திலே உலகத்திலும், எமதுசுவநாடாகிய இலங்கையிலும்நிகழ்ந்த சரித்திரசம்பவங்களையும், மாணவர்கள் சிறப்பாக அறியவேண்டிய பெரியார்கள், அரசர்கள், சமயசிலங்கள், இலக்கியக்கருத்துகளையும் காட்சிபோன்று கண்ணுக்கும், கருத்துக்கும் அழகாகவும், கவர்ச்சிகரமாகவும் எடுத்துக்கூறுகின்றது. சரித்திரபாடத்தில் மிக்கான ஆர்வமுடையவரும், அதுகாரணமாகச் சரித்திரஆராய்ச்சித்துறையில் தேர்ச்சியுடையவருமான இந்நூலாசிரியர் காலஒழுங்குப்படி உலகசரித்திரத்தை எமதுநாட்டின்சரித்திரத்தைவிளக்கும் வகையில் தொடர்புபடுத்திக்காட்டியும், ஒப்புமைகள் எடுத்துக்காட்டியும், காரணகாரியதொடர்பாக விரித்துக் காட்டியும் அளித்திருக்கும் இந்தச் சரித்திரக்காட்சியானது மாணவர்க்குச் சரித்திரபாடத்தில் ஆர்வத்தையும், அறிவாராய்ச்சியையும் இலகுவில் உண்டுபண்ணுமெனில் மிகையாகாது. சிலசரித்திராசிரியர்களைப்போன்று ஆராய்ச்சித்துறையில் கஷ்டமானதையும், அறிவுக்கெட்டாததையும் கைகழுவி அப்பால் கடந்துசெல்லாது சமயங்கள், சாகியங்கள், இராச்சியங்கள், பேரரசுகள், சிற்றரசுகள், அவற்றின்எழுச்சிகள், வீழ்ச்சிகள், விழிப்புகள், பேரழிவுகள், சீரழிவுகளையெல்லாம் ஆங்கிலநூல்களின் தரத்தைப்பின்பற்றி இனியசெந்தமிழிலே, அரிய வசனநடையிலே தகுந்தவிடங்களிலே தக்கவாறுவிளக்கி ஆவசியகம்வேண்டிய இடங்களிலே படங்களைக்கொண்டுவிளக்கி இச்சரித்திரக்காட்சியை எழுதித்தந்துள்ள ஆசிரியரின் திறமை பாராட்டத்தக்கதே. இதற்குமுன் அவர்எழுதிய சரித்திரக் காட்சிநூல்களை நல்வரவேற்ற சரித்திர தமிழ்மாணவர்உலகம் இதனையும் நயந்தேற்குமெனவே நம்புகின்றோம். நமக்குஅனுப்பியபிரதிக்காக நன்றி கூறுகின்றோம்

## பிரிவு உபசாரணை

கடந்த நான்குஆண்டுகளாய் வதிரி விசாரணைப்பங்குக் குருவாயும், கரவெட்டி திருஇருதயகல்லூரி அதிபராயுமிருந்து நற்றொண்டாற்றி இடமாற்றமாகிச்செல்லும் வண. பி. ஏ. அல்பிறெட் சுவாமியவர்களுக்கு வதிரி, கரவை ஞானமக்கள்சார்பில கரவெட்டி திருஇருதயகல்லூரியில் ஒரு பிரிவு உபசாரணை அளிக்கப்பெற்றது. அன்று பிற்பகல் வதிரி அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் பிரியாவிடை நாயகரால் 'தெதேயும்' என்னும் தேவதோத்திரகீதம்பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றது. அதன்மேல் அவர் மலர்மாலைசூட்டப்பெற்றுக் குருமனையிலிருந்து நாதசுர வாத்தியங்கள் இசைக்கக் கல்லூரி மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வண. என் கருணாகரர் சுவாமியவர்கள் தலைமைதாங்கித் தலைமைப்பேருரை நிகழ்த்தினர். திருமதி அக்னெஸ்மரியாம்பிள்ளைஆசிரியை பிரிவோபசார வாழ்த்துப்பாக்கள் பாடினார். வதிரி, கரவை ஞானமக்கள்சார்பில் ஆசிரியர் திரு. சி. வின்சென்ற்அவர்கள் பிரிவோபசாரப்பத்திரம் வாசித்துவழங்கினார். சுவாமியவர்கள் வதிரிவிசாரணைப்பங்கில் தனித்திருந்து, பொறுப்புள்ள இருபதவிகளை வகித்திருந்த போதிலும் அயராஊக்கத்துடன் ஆற்றியதொண்டுகளையும், ஓய்வுஉறக்கமின்றி ஆத்துமவாஞ்சையையே தனிநோக்கமாகக்கொண்டு செய்த அருஞ்சேவைகளையும் பாராட்டித் திருவாளர்கள் மெல்கியோர் சிங்கராயர், வ. இராசையா ஆதியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

பிரியாவிடைநாயகர்எழுந்து தமது சேவைகாலத்தில் தம்கடமைகளை நிறைவுறச் செய்வதற்கு வதிரி, கரவை மக்கள் காட்டிய ஒத்துழைப்பையும், சங்கங்கள், சேனைகள் தொடங்குவதற்கு அளித்த ஊக்கத்தையும் வியந்பேசித் தமக்களிக்கப்பெற்ற உபசாரணைக்கு நன்றிநவின்று திருக்காசீர் அருளினர் பின்னர் அலங்கரிக்கப்பெற்ற ஓர்மோட்டார்ரதத்திலே ஊர்வலமாக நெல்லியடிச்சந்திவரை அழைத்துச் செல்லப்பெறவே, வழிநீளம் மலர்மாலைகள்சூட்டி மக்கள் உபசரித்துநின்றனர். ஊர்வலம் சந்தியை அடைந்ததும் சுவாமியவர்கள் காங்குளித்து வணக்கம்கூற, மக்கள் தாயைப்பிரிந்த சேயெனத் தாங்கொணாத் துயருடன் தத்தம் இல்லம் ஏகினர்.

— எஸ். வின்சென்ற்

● ஜோர்தான் நாட்டிலுள்ள பலஸ்தீனிய, அராபிய அகதிகளுக்குப் பரிசுத்தஸ்தானத்தின்பேரால் கஷ்டநிவாரணம்அளிப்பதிலே எடுத்துள்ள மனுஷத்தன்மைவாய்ந்த நடவடிக்கைகளைப் பாராட்டி நியூயோர்க்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவருக்கு ஜோர்தான் நாட்டின் ஹுசேயின் அரசர் அல்கவாப்எனும் பதக்கத்தைச் சன்மானித்திருக்கின்றார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 5-1959.